பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 தை 21 வெள்ளிக்கிழமை (03.02.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :68

# நாடாளுமன்ற அமர்வு திடீரென குண்டுப் பீதியால் ஒத்திவைப்பு

## அதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தேச ரகளையும் சப் என்று போனது

கொழும்பு,பெப்ரவரி 3

**நாடாளுமன்றில் நேற்றுக்காலை திடீரென எழுந்த பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக சபையில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. நேற்று ஆரம்பத்துடனேயே நாடாளுமன்றம் இம் மாதம் 14ஆம் திகதிவரை ஒத்திப் போடப்படுகிறது என சபாநாயகர் அறிவித்து சபையை ஒத்திவைத்தார்.**

**இதனால் சபைக்குள் நேற்று தமிழ் எம்.பிக்கள் நடத்தவிருந்த ஆர்ப்பாட்ட ரகளை சப்பென்று போயிற்று.**

சபைக்குள் வெடிகுண்டு இருப்பதாகச் சந்தேகம் கொண்டு பொலீஸாரும், விசேட அதிரடிப்படையினரும் மோப்பநாய்கள் மற்றும் சோதனைக் கருவிகள் சகிதம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆசனங்களையும் மேசைகளையும் கடும் சோதனைக்குட்படுத்தினர்.

எதிர்க்கட்சி வரிசையில் அமைந்துள்ள ஜே.வி.பி. - நாடாளுமன்ற உறுப்பினர்களின் பின்வரிசை ஆசனங்களே இவ்வாறு பல மணிநேரங்களாகச் சோதனையிடப்பட்டன.

இதனால், சபைக்குள் ஆர்ப்பாட்டம்,ரகளை நடத்தவிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களின் முயற்சியும் இரண்டு நிமிடங்களில் முடிவுக்கு வந்தது.

வடக்கு - கிழக்கில் அரச படையினரும் அவர்களுடன் இணைந்த ஒட்டுப் படையின

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர் ஆர்ப்பாட்டம் ஒத்திவைப்பு

அம்பாறை.பெப்.3

'சுடர் ஒளி' பத்திரிகையின் திருகோணமலைச் செய்தியாளர் சுகிர்தராஜன் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து இன்று முற்பகல் அம்பாறை நகரில் தாம் நடத்தவிருந்த ஆர்ப்பாட்டத்தை 'மிக்ஸ் மீடியா போரம்' (பல்லின ஊடகவியலாளர் ஒன்றியம்) ஒத்திவைத்திருக்கின்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் ஆயுதக்குழு ஒன்றினால் கடத்தப்பட்டமையை ஆட்சேபித்து இன்று அம்பாறை மாவட்ட பொங்கியெழும் மக்கள் படை அந்த மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்க அழைப்பு விடுத்துள்ளது. இதன் காரணத்தினாலேயே அதற்கு ஒத்துழைக்கும் வகையில் இந்த ஆர்ப்பாட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பல்லின ஊடகவியலாளர்கள் ஒன்றியப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (க)

## அரசு பேச்சுக் குழுவுக்கு அமைச்சர் நிமல் தலைவர்

கொழும்பு,பெப்.3

ஜெனீவாவில் விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படவிருக்கும் பேச்சுகளின்போது அரசுத் தரப்புப் பிரதிநிதிகள் குழுவுக்கு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவே தலைமை வகிப்பார்.

அரசுத் தரப்புக் குழுவில் அங்கம் வகிக்கும் ஏனையோரின் பெயர் விவரங்கள் பெரும்பாலும் இரண்டொரு நாள்களுக்குள் அரசினால் வெளியிடப்படும்.

- இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கின்றார் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர.

அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை அறிவிப்பதற்காக நேற்றுத்தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார். அங்கு இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது :-

பேச்சுக் குழுவில் வெளிவிவகார அமைச்சரான நானோ (மங்கள சமரவீரவோ) அல்லது வெளிவிவகார அமைச்சின் செயலாளரோ பங்குபற்ற மாட்டோம். எனினும், உயர்மட்டக் குழு ஒன்றை இப்பேச்சுக்கு அனுப்ப ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

எப்படியும் பேச்சுகள் அடுத்த மூன்று வாரத்துக்குள் நடைபெறும் என்பது மட்டும் உறுதி.

தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் கடத்தப்பட்ட காரணத்துக்காக உத்தேசப் பேச்சுகள் குழம்பும் என்று நான் கருத வில்லை.

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அலுவலகங்களில் இராணுவத்தினர் சோதனை!

கரவெட்டி,பெப்.3

வடமராட்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகங்கள் இரண்டு நேற்று இராணுவத்தினரால் உடைக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

வடமராட்சி வதிரிச் சந்திக்கு அண்மையில் உள்ள புலிகளின் அரசியல்துறை அலுவலகமும் மகளிர் அரசியல்துறை அலுவலகமுமே இவ்வாறு திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றின் அருகே இருந்த அப்பகுதிக்கான தேசிய எழுச்சிப் பேரவையின் அலுவலகமும் சோதனையிடப்பட்டது.

இந்த அலுவலகங்கள் அமைந்திருந்த வீடுகளுக்கு காலையில் வந்த படையினர் அவற்றின் கதவுப் பூட்டுகளை அடித்து உடைத்து உள்ளே நுழைந்தனர். அனைத்து இடங்களிலும் சோதனைகளை மேற்கொண்ட அவர்கள், பின்னர் போட்டவை போட்டபடி அப்படியே விட்டுவிட்டு வெளியேறிச் சென்று விட்டனர். சந்தேகத்திற்கிடமான பொருள்கள் எவையும் அங்கிருக்கவில்லை என்று நெல்லியடிப் பொலீஸார் தெரிவித்தனர்.

உடைக்கப்பட்ட அலுவலகங்களின் கதவுகள் அப்படியே திறந்து விடப்பட்டபடி இருக்கின்றன என்று அருகிலுள்ள மக்கள் தெரிவித்தனர்.

கடந்த இரு நாள்களாக வடமராட்சியில் மக்களை அச்சுறுத்தும் வகையில் படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே இந்தச் சோதனையும் இடம்பெற்றுள்ளது என்று பொதுஅமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. (ம-70)

## வவுனியாவில் நேற்றுக் கதவடைப்பு

வவுனியா,பெப்.3

வவுனியாவில் வர்த்தகர்களுக்கு எதிராக அண்மைய நாள்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த தாக்குதல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியா வர்த்தகர்கள் நேற்று கதவடைப்பு நடத்தினர்.

வர்த்தகர்கள் தரப்பில் கண்டனப் பேரணி ஒன்றும் நேற்று நடத்தப்பட்டது. எனினும், அதில் குறைந்த எண்ணிக்கையான வர்த்தகர்களே பங்குபற்றினர்.

வவுனியா தினச் சந்தைக்கு முன்னால் இருந்து பேரணி ஆரம்பமானது. பேரணியாகச் சென்றோர் வவுனியா அரச செயலகத்தில் வைத்து மேலதிக அரச அதிபரிடம் தமது கருத்துகள் அடங்கிய மகஜரைக் கையளித்தனர்.

இதனைத் தொடர்ந்து பொலீஸ் அதிகாரிகள், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் மற்றும் பலருக்கு மகஜர்கள் கொடுக்கப்பட்டன. வவுனியாவில் மூவாயிரத்துக்கும் அதிகமான வர்த்தகர்கள் இருக்கின்றனர். இவர்களில் சுமார் ஆயிரத்து ஐந்நூறு பேர் வர்த்தக சங்கத்தில் அங்கத்தவர்களாக இருக்கின்றனர். எனினும், குறைந்த அளவிலான வர்த்தகர்களே இந்தக் கண்டனப் பேரணியில் கலந்துகொண்டார்கள்.

கடந்த இரண்டு வாரங்களில் மூன்று வர்த்தகர்களின் வீடுகளில் (14ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட இருவரும் மட்டு. பொலீஸ் நிலையத்தில் தடுத்துவைப்பு

கொழும்பு,பெப்.3

கருணா குழுவினர் எனக் கருதப்படுவோரால் கடத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட - தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முன்பள்ளி ஆசிரியைகள் இருவரும் நேற்று மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தில் ஆஜராகி குற்றப்புலனாய்வுப் பொலீஸாரிடம் வாக்கு மூலமளித்தனர்.

வாக்குமூலம் அளித்த அவர்களை நேற்றிரவு வீடு திரும்பவிடாது பொலீஸார் பொலீஸ் நிலையத்திலேயே தடுத்து வைத்திருந்தனர். இதனால் அந்த ஆசிரியைகளின் பாதுகாப்புக் குறித்து சந்தேகம் கிளப்பப்பட்டதுடன் அவர்கள் அச்சுறுத்தப்பட்டு அவர்களது சாட்சியங்களை மாற்றியமைக்க முயற்சி எடுக்கப்படலாம் என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டது.

இரண்டு வெவ்வேறு சம்பவங்களில் - கடந்த ஞாயிறன்றும் , திங்களன்றும் - தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த எட்டுப் பணியாளர்கள் ஆயுதக்குழுவினரால் வெலிகந்தைப் பகுதியில் வைத்துக் கடத்தப்பட்டனர் என்பது தெரிந்ததே.

அவர்களில் ஞாயிற்றுக்கிழமை கடத்தப்பட்ட ஐவரில் இரு பெண்கள் மட்டும் விடுவிக்கப்பட்டனர்.

நேற்றுக்காலை அவர்களை அழைத்துக் கொண்டு கடத்தல் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படும் இடத்துக்குச் சென்று நேரடி விசாரணைகளை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நடத்த இருந்தனர் என்று கூறப்பட்டது. ஆனால், இறுதிநேரத்தில் அங்கு செல்வது தமக்குப் பாதுகாப்பு இல்லை எனத் தெரிவித்து அந்நடவடிக்கையை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் மேற்கொள்ளாமல் கைவிட்டனர் எனக் கூறப்படுகின்றது.

இதையடுத்து நேற்றுப்பிற்பகல் 'புனர்வாழ்வுக் கழக அதிகாரிகள், சட்டத்தரணிகள் சகிதம் அந்த இரு பணியாளர்களையும் மட்டக்களப்பு பொலீஸ் நிலயத்தில் ஆஜர் செய்தனர்.

அங்கு நேற்றுப் பிற்பகல் தொடக்கம் மாலைவரை குற்றப் புலனாய்வுப் பொலீ

(14ஆம் பக்கம் பார்க்க)

## அதிபர் கடத்தல்

மட்டக்களப்பு.பெப்.3

மட்டக்களப்பு வாழைச்சேனை இந்துக் கல்லூரியின் அதிபர் எம்.தவராசா (வயது 56) நேற்று இனம்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் பாடசாலையில் கடமையாற்றிக் கொண்டிருந்தபோதே கடத்தப்பட்டார் என்று கூறப்படுகிறது. (ஓ)

## சந்திப்பு இரத்து

கொழும்பு,பெப்.3

உதவும் அமைப்புகளுக்கும், விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் இன்று கிளிநொச்சியில் நடக்கவிருந்த சந்திப்பு இரத்தாகியிருப்பதாகத் தெரியவருகின்றது.

இதேசமயம், இன்று கிளிநொச்சியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளு

(14ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெலிகந்தப் பகுதியில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்களை விடுவிக்குமாறு கோரி நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற கண்டனப் பேரணியின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (செய்தி 3ஆம் பக்கத்தில்)

# விடுதலைப் புலிகள் சார்பு ஊடகங்களால் நாட்டுக்கும், மக்களுக்கும் அச்சுறுத்தலாம்

## எச்சரிக்கிறார் ஜே.வி.பி.பிரசாரச் செயலர்

கொழும்பு,பெப்.3

கொழும்பில் வெளிவரும் தமிழ் ஊடகங்களைப் பயன்படுத்தி அரசாங்கத்தையும், மக்களையும் அச்சுறுத்தி காரியங்களை சாதிக்க விடுதலைப் புலிகள் முயற்சி செய்து வருகின்றனர்.

- இவ்வாறு விடுதலைப் புலிகள் மீது குற்றஞ் சுமத்தியுள்ளார் ஜே.வி.பி. பிரசார செயலாளரும் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான விமல் வீரவன்ஸ.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் விசேட அறிக்கை ஒன்றை விடுத்து உரையாற்றும் போதே மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகள் வடக்கு - கிழக்கில் மட்டும் செயற்படவில்லை. அவர்களின் எண்ணக் கருவை செயற்படுத்துபவர்களாக கொழும்பில் ஊடகவியலாளர்கள் என்ற பெயரில் செயற்பட்டு வருகின்றனர். விடுதலைப் புலிகளின் தரைப்படை, கடற்படைகளைவிட மிகவும் பலம்பொருந்தியவர்களாக புலி ஊடகவியலாளர்கள் காணப்படுகின்றார்கள்.

புலிகளுக்கு சார்பாக கொழும்பில் செயற்படும் சில ஊடகங்களால் இந்த நாட்டுக்கும், மக்களுக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான ஊடகங்கள் மூலம் புலிகள் அரசாங்கத்தையும், மக்களையும் அச்சுறுத்தி தமது காரியத்தை செய்ய எத்தனிக்கின்றனர்.

இவ்வாறான புலி சார்பு ஊடகங்கள் வெளியிடும் செய்திகளால் நாட்டின் அபிவிருத்தி பாதிக்கப்படுகிறது. அண்மையில் வெளியான ஆங்கில நாளிதழ் ஒன்றில் தைப்பொங்கல் தினத்தன்று மத்திய வங்கி, துறைமுகம் மற்றும் பிரதான ஹோட்டல் ஒன்று ஆகியவற்றின் மீது புலிகள் தாக்குதல் மேற்கொள்ளவுள்ளனர் என்று செய்தி வெளியாகியிருந்தது. இவ்வாறான செய்திகளால் பல வர்த்தக நிலையங்களின் செயற்பாடுகள் முடக்கப்பட்டன. வெளிநாடுகளிலுள்ளவர்கள் முதலீடுசெய்ய பின்னடிக்கின்றார்கள்.

எனவே புலி ஆதரவு ஊடக பயங்கரவாதத்தை கட்டுப்படுத்தாவிட்டால் மக்களும் நாமும் முன்னோக்கிச் செல்ல முடியாது என்றார். (ஓ-6)

## அரியாலையில் நேற்றுச் சோதனை

தென்மராட்சி,பெப்.3

ஏ-9 வீதியூடாகச் சென்ற வாகனங்கள் நேற்று அரியாலைப் பகுதியில் சோதனையிடப்பட்டன.

பொலீஸாரும் படையினரும் இணைந்து இச் சோதனையில் ஈடுபட்டனர்.

வாகனங்களில் பயணித்தோர் இறக்கப்பட்டு அவர்களது அடையாள அட்டை, கையில் வைத்திருந்த பொதிகள் ஆகியவை சோதனையிடப்பட்டன. (ஓ-117)

# கோட்ட அலுவலர் நியமனத்தில் அநீதி என அதிபர் முறைப்பாடு

## எம்.பி.காரணமெனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,பெப்.3

கோட்டக் கல்வி அலுவலர் நியமனத்தில் தனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக வடமராட்சிப் பிரதேச பாடசாலையொன்றின் முன்னாள் அதிபர் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஆசிரியராகவும், அதிபராகவும் பல வருடங்கள் பணியாற்றிய தனக்கு பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கான தேர்வில் அதிக புள்ளிகள் கிடைத்தன என்றும் -

ஆனால், தனக்கு அந்த நியமனம் வழங்கப்படவில்லை என்றும் - முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அதிபர் பதவியிலிருந்து கோட்டக் கல்வி அலுவலகத்துக்கு இடம் மாற்றப்பட்டுள்ள தனக்கு அங்கு பணி எதனையும் தராதுள்ளனர் என்றும் அவர் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கெல்லாம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே காரணமென்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (ஓ-12-14)

# அம்புலன்ஸ் வசதி பெறுவதற்கான தொலைபேசி இலக்கங்கள் திருத்தம்

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ்.மாவட்டத்தில் அவசர உயிர்காப்புத் தேவைகளின் நிமித்தம் இரவு நேரத்தில் யாழ்.மாகாணப் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏற்பாட்டில் நடத்தப்படும் அம்புலன்ஸ் சேவைக்கென தொலைபேசி இலக்கங்களில் இரண்டு திருத்தப்பட்டுள்ளன என்று சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்கு 060 221 3660 என்ற இலக்கத்துடனும், மருதங்கேணி கிராமிய வைத்தியசாலைக்கு 060 221 3580 என்ற இலக்கத்துடனும் தொடர்புகொண்டு பொது மக்கள் இரவு வேளைகளில் அவசர அம்புலன்ஸ் வாகன வசதியைப் பெறலாம்.

கடும் சுகவீனமுற்ற நோயாளர்களை இரவு நேரங்களில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதில் தனியார் வாகனங்கள் பாதுகாப்பற்ற நிலை காணப்படுகிறது. இதனால், இரவு வேளைகளில் மட்டும் வீடுகளுக்குச் சென்று நோயாளர்களை ஏற்றிவர வைத்தியசாலை அம்புலன்ஸ் வாகனங்களுக்கு யாழ்.பாதுகாப்புத் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது.

இதனையடுத்து அம்புலன்ஸ் வசதியைப் பெற அணுகவேண்டிய மருத்துவமனைகள் மற்றும் அவற்றின் தொலைபேசி இலக்கங்கள் ஆகியவை வெளியிடப்பட்டன. அந்த விபரங்கள் நேற்றுமுன்தினம் உதயனில் வெளியிடப்பட்டன. அவற்றில் இரு இலக்கங்களே திருத்தப்பட்டுள்ளன. (ஓ)

## ஐ.ஐ.எஸ் நிறுவன ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,பெப்.3

ஐ.ஐ.எஸ் கணனி நிறுவனத்தின் 10 ஆவது ஆண்டு வீழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரி ஜூபிலி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நிறுவன இயக்குநர் கே.விக்னேஷ் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் கடந்த கல்வியாண்டில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவருக்கு தங்கப்பதக்கம் வழங்கப்படவுள்ளது.

இவ்வருடம் சுரேகா பத்மநாதன் தங்கப் பதக்கத்தைப் பெறுகின்றார்.

சிறப்பு விருதுகளை அ.பபித்ரா, க.இகழ்வஞ்சி, ர.மயூரி,பூ.நிதர்சன்,கோ.கார்த்திகன், அ.சுரேஷ்குமார்,கோ.சுபாசினி ஆகியோர் பெறவுள்ளனர். (ஓ-202)

# இலங்கை கடற்படையினரிடமிருந்து இந்திய மீனவரைக் காப்பது எப்படி?

## இரு நாட்டு அதிகாரிகளும் கொழும்பில் கூடிப் பேச்சு

கொழும்பு, பெப்.03

பாக்கு நீரிணைக் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் இலங்கை, இந்திய மீனவர்களிடையே எழும் தகராறுகளை சுமுகமாகத் தீர்ப்பதற்கான வழி வகைகள் உட்பட, கூட்டு ஒத்துழைப்பு மூலம் மீன்பிடித் துறையை அபிவிருத்தி செய்வது போன்ற பொதுவான விடயங்கள் குறித்து மீன்பிடித்துறை தொடர்பான இலங்கை - இந்திய கூட்டுச் செயலணிக் குழுவின் கூட்டத்தில் இரண்டாவது தடவையாக விரிவாக ஆராயப்பட்டிருக்கிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடந்த இந்தக் கூட்டத்தில், இந்தியக் குழு இந்திய வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் மோகன்குமார் தலைமையில் கலந்துகொண்டது.

இலங்கைக் குழுவுக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் கீதா டீ சில்வா தலைமை தாங்கினார்.

இந்திய மீன்பிடிக் கப்பல்கள் மீது இலங்கைக் கடற்படையினர் எழுந்தமான முறையில் துப்பாக்கிச் சூடு நடத்துவதை தவிர்க்கும் வழிவகைகள், அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடித்தார்கள் என்ற சந்தேக்தின் பேரில் இரு நாட்டு அதிகாரிகளினால் தடுத்து வைக்கட்டிருக்கும் மீனவர்களை விடுவிப்பது ஆகியன பற்றி இரு தரப்பினரும் மிகவும் புரிந்துணர்வுடன் கலந்துரையாடினர் என வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை மீனவர்கள் 24 பேர் இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களை விடுவிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக கலந்துரையாடலின் போது இந்தியத் தரப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளிலும்மீன் பிடித்துறை வளங்கள் பெருமளவில் இருக்கின்றன. எனவே, கூட்டு நடவடிக்கைகள் மூலம் இவற்றின் பயனை மக்களுக்கு கிடைக்கச் செய்யும் முயற்சிகளில் ஈடுபடுவதற்கும் பேச்சின்போது இணக்கம் காணப்பட்டுள்ளது என்றும், செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆழ்கடல் மீன்பிடி, மீன்பிடித் துறைமுக அபிவிருத்தி, மீனவருக்கு நவீன பயிற்சியளித்தல், ஆய்வு கூடப் பரிசோதனை போன்ற விடயங்களில் கூட்டாகச் செயல்படுவது குறித்தும் இப்பேச்சின் போது விரிவாக ஆராயப்பட்டிருக்கிறதாம்.

# நியமனம் பெற்ற தொண்டர் ஆசிரியர்கள்

குடாநாட்டில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களில் நிரந்தர நியமனம் பெற்றவர்களுடைய பெயர் விபரங்களை வடக்கு - கிழக்கு மாகாண சபை வெளியிட்டுள்ளது.

அவை வலய ரீதியாக வருமாறு:-

**யாழ்.வலயம்**

சின்னப்பு சுதாகரன் (புனித சாள்ஸ் ம.வி.), செல்வி எ.வேலுப்பிள்ளை (புனித ஜேம்ஸ் ம.வி.), செல்வி ஜெ.அந்தோனிப்பிள்ளை (புனித ஜேம்ஸ் பெண்கள் வித்தி.), அ.கிருபநாயகம் (புனித ஜேம்ஸ் பெண்கள் வித்தி.), திருமதி நிரஞ்சினி பிரேமச்சந்திரன் (புனித மரியாள் றோமன் கத்தோலிக்க பாடசாலை).

திருமதி தயாநிதி சத்தியரூபன் (அச்செழு சைவப்பிரகாச வித்தி.), செ.சிவநேசன் (வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தி.), செல்வி ம.செல்லத்துரை (கோப்பாய் நாவலர் வித்தி.), செல்வி அ.வேலுப்பிள்ளை (நவக்கிரி அ.மி.த.பாடசாலை), செல்வி ற.கந்தசாமி (புத்தூர் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை) -

செல்வி ச.சரவணை (சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை), செல்வி ச.கனகசுந்தரம்பிள்ளை (தோப்பு அருள்நந்தி வித்தி.) -

**வலிகாமம்**

செல்வி அ.செல்லையா (இராமநாதன் கல்லூரி), செல்வி நி.கணேசு (உடுவில் முருகமூர்த்தி வித்தி.), செல்வி ம.அம்புறோஸ் அன்ரனி (சுன்னாகம் றோ.க.த.பாடசாலை), செல்வி சு.கனகரட்ணம் (கோட்டைக்காடு அ.த.க.பாடசாலை), செல்வி பூ.இரத்தினசிங்கம் (ஈவினை அ.த.க.பாடசாலை), செல்வி கெள.இராசேந்திரம் (சங்கானை சைவப்பிரகாச வித்தி.), செல்வி ர.கந்தசாமி (சங்கானை சைவப்பிரகாச வித்தி.), திருமதி தனலட்சுமி செல்வரத்தினம் (அராலி அ.மி.த.க.பாடசாலை), செல்வி ம.நடராசா (அராலி அ.மி.த.கபாடசாலை), செல்வி து.நடராசா (சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை) செல்வி றோ.மனுவல் (மாரீசன்கூடல் சுப்பிரமணியம் வித்தி.), செல்வி வா.தர்மரட்ணம் (மாரீசன் கூடல் சுப்பிரமணியம் வித்தி.), செல்வி ரெ.யோசப் (பெரியவிளான் றோ.க.பாடசாலை), செல்வி ச.கதிர்காமு (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), செல்வி பா.நவரத்தினசிங்கம் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), செல்வி க.இராதுரை (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), செல்வி சி.வின்சன்ராஜ் (சென்.ஆன்ஸ் றோ.க.த.பாடசாலை), சி.யேசுரட்ணம் (சுதுமலை சிந்மய பாரதி வித்தி.), செல்வி அ.பேரின்பநாதன் (நவாலி அட்டக்கிரி சைவ வித்தி.), செல்வி.றொ.ஞானசீலன் (நவாலி புனித பீற்றர் றோ.க.), செல்வி ரா.சிவன்செயல் (மகாஜனாக் கல்லூரி), செல்வி சி.சோமசுந்தரம் (அளவெட்டி சீனன் கலட்டி ஞானோதய வித்தி.), செல்வி சு.செல்வராசா (அளவெட்டி சீனன் கலட்டி ஞானோதய வித்தி.), பொ.ஆதவன் (அளவெட்டி சதானந்த வித்தி.), செல்வி கே.லதா (சில்லாலை றோ.க.) -

**தீவக வலயம்**

ரி.அ.ஜெயராஜ் (நெடுந்தீவு சீக்கிரியாம்பலம் அ.த.க.பாடசாலை), செல்வி லூ.பயஸ் (சிறிய புஸ்பா பெண்கள் ம.வி.), திருமதி பு.கணேசதாசன் (புனித மரியாள் றோ.க.பெண்கள் பாடசாலை), வண.சகோதரி நெற்றலின் திரேசா (புனித மரியாள் றோ.க.பாடசாலை), செல்வி தா.சபேஸ்வரன் (அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை), திருமதி உ.ஜீவசீலன் (அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை), செல்வி த.பரமலிங்கம் (புங்குடுதீவு ம.வி.), செல்வி ந.பொன்னம்பலம் (புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் பாடசாலை), செல்வி அ.திருச்செல்வம் (புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் பாடசாலை), செல்வி கே.ராஜரட்ணம் (ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தி.), வி.ஜெயரூபன் (ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தி.), திருமதி கி.சிவகுமரன் (ஸ்ரீ நாகபூசணி வித்தி.), ஞா.சுரேஸ் ஸ்ரீ நாகபூசணி வித்தி.), செல்வி ஜே.மரியதாஸ் (அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி.), ந.குணசீலன் (வேலணை மேற்கு நடராசா வித்தி.), செல்வி க.இரகுப்பிள்ளை (வேலணை தெற்கு ஐயனார் வித்தி.) -

**வடமராட்சி வலயம்**

க.சிவகுமார் (செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை), செல்வி ஆ.கந்தசாமி (உடுத்துறை ம.வி.), செல்வி த.சங்கரநாராயணன் (சிதம்பராக் கல்லூரி), செல்வி ந.சிவனருள் காந்தி (வல்வை மகளிர் கல்லூரி), திருமதி மாலினி சசிக்குமார் (வீரகத்திப்பிள்ளை ம.வி.), செல்வி சு.சுப்பிரமணியம் (பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன்), செல்வி.பா.குலேந்திரன் (கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை) செல்வி கு.பாலகிருஷ்ணன் (வல்வெட்டித்துறை றோ.க.), திருமதி கா.ஜெயநந்தன் (புலோலி மெதடிஷ்த மிசன் பாடசாலை)-

திருமதி வி.பகீரதன் (உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் வித்தி.), திருமதி இ.ரங்கநாதன் (உடுப்பிட்டி அமெரிக்க மிசன் வித்தி.), செல்வி வ.குகதாசன் (கரவெட்டி ஸ்ரீ சாரதா வித்தி.) செல்வி ரா.சின்னத்துரை (துன்னாலை தெற்கு அ.த.க.பாடசாலை.)

**தென்மராட்சி**

செல்வி சின்னப்பு சகுந்தலா (கரம்பைக் குறிச்சி அ.த.க.பாடசாலை), செல்வி த.விநாசித்தம்பி (மிருசுவில் அ.த.க.பாடசாலை). (ஓ-6-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் -- 222 2030, 222 2083, 222 3837.

## ஊடகங்களுக்குப் புலிச்சாயம்

நாடு மிக முக்கியமான காலகட்டத்தில் உள்ளது. இலங்கைத் தீவையே உலுப்பிவரும் தேசியப் பிரச்சினையான இனப்பிணக்குக்கு இணக்கத்தீர்வு காண்பதற்கான இறுதி முயற்சிகளை நாடு எதிர்கொண்டிருக்கும் வேளை இது.

சம்பந்தப்பட்ட இனங்கள் தத்தமது ஆதங்கங்களை - குறைபாடுகளை - மனக்குறைகளை - அபிலாஷைகளை - எதிர்பார்ப்புகளை - உரிமைகளை - பகிரங்கமாக முன்வைத்து, கருத்துப் பரிமாறி, கலந்துரையாடி, தீர்க்கமான ஒரு கட்டத்துக்கு - முடிவுக்கு - வரவேண்டிய காலத்தின் கட்டாயம் இன்று எதிர்கொள்ளப்படுகின்றது.

இந்தச் சமயத்திலே மக்களின் கருத்துகளையும், உள்ளக் கிடக்கைகளையும் வெளிப்படுத்துவதற்கான களத்தை அமைப்பதில் ஊடகங்களின் பங்கு மிக முக்கியமானதாக அமைகின்றது.

மக்களின் மனதில் தேங்கிக்கிடக்கும் கருத்து நிலைப்பாட்டை வெளிக்கொணர்பவை ஊடகங்களே.

அந்த வகையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சியில் ஊடகங்களின் பங்கு அளப்பரியதாகிறது. மக்களின் கருத்துருவாக்கிகளாகவும், எண்ணங்களை ஒன்றுபடுத்தி பிரதிபலிக்க வைக்கும் கண்ணாடிகளாகவும் செயற்படுபவை அவை.

அதுவும் இலங்கையின் இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை அதில் மோசமாகப் பாதிக்கப்பட்ட சிறுபான்மை இனம் என்ற வகையில் தமிழர் தரப்பின் கருத்தியல் நிலைப்பாட்டை வெளிக்கொணர்ந்து, சர்வதேச மயப்படுத்தி முன்வைப்பதில் தமிழ் ஊடகங்களின் பங்கு முக்கியமானதாகின்றது.

தமிழரின் தேசியத்துக்காகவும், தேசிய விடுதலைக்காகவும் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஏனைய அரசியல் சக்திகளும் ஒருபுறம் போராட்டம் நடத்த, மறுபுறம் தமிழர்களின் தேசிய அபிலாஷைகளையும், உரிமைக்கான எதிர்பார்ப்புகளையும் பிரதிபலிப்பதில் முன்னின்று தமது கடமையை ஆற்றிவருகின்றன தமிழ் ஊடகங்கள்.

இதனால், தமிழர் தரப்பின் கருத்துகளைப் பிரதிபலிக்கும் தமிழ் ஊடகங்களுக்குப் புலிச்சாயம் பூசப்படுகின்றது. இக்காரணத்தினால் பேரினவாதத்தின் கொடூரப் பார்வையையும், எரிச்சலையும், நெருக்குதல்களையும் எதிர்கொள்ள வேண்டிய இக்கட்டை சந்திக்க வேண்டியவையாக அவை உள்ளன.

பேரினவாதத்தின் அடக்குமுறைக்கும் உரிமை மறுப்புக்கும் உள்ளாகியிருக்கும் தமிழ் மக்களின் கருத்து நிலைப்பாடு பகிரங்கமாக வெளிப்படுவதையும் சர்வதேச மயப்படுத்தப்படுவதையும், உண்மைகள் அம்பலமாவதையும் விரும்பாத இந்த மேலாண்மைவாத சக்திகள், அந்தக் கருத்துகளை வெளிப்படுத்தும் தமிழ் ஊடகங்களைப் புலிச்சாயம் பூசி அடக்கி, ஒடுக்கி, மௌனிக்கவைக்க முயல்கின்றன.

கொழும்பில் இயங்கும் புலி ஆதரவு ஊடகங்களால் பேராபத்து எனத் தெரிவித்து, அவற்றைக் கட்டுப்படுத்துமாறு நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ எழுப்பிய கூச்சல் இந்த வகையானதுதான்.

*''விடுதலைப் புலிகள் வடக்கு - கிழக்கில் மட்டும் இயங்கவில்லை. அவர்களின் எண்ணக்கருவை செயற்படுத்துபவர்கள் கொழும்பில் ஊடகவியலாளர்கள் என்ற பெயரில் செயற்பட்டுவருகின்றனர். புலிகளின் தரைப்படை, கடற்படையை விட இந்தப் புலி ஊடகவியலாளர்கள் பலம் பொருந்தியவர்கள்''* - என்று நச்சுவிதை விதைத்திருக்கிறார் விமல் வீரவன்ஸ.

இந்த ஊடகங்கள் ''புலி ஆதரவு ஊடகப் பயங்கரவாதம் புரிகின்றன'' - என்றும் விமர்சித்திருக்கின்றார் அவர்.

இப்படித்தான் இவர்கள் செயற்படுவார்கள் என்பதை ஒன்றரை மாதத்துக்கு முன்னர் இதே பத்தியில் கோடி காட்டியிருந்தோம். நமது திருகோணமலைச் செய்தியாளர் சுகிர்தராஜன் சுட்டுக்கொலை செய்யப்படுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னரே - டிசம்பர் 19ஆம் திகதி - இப்பத்தியில் 'தமிழ் ஊடகத்துறை மீதான கெடுபிடி இறுகுகின்றது'' என்ற தலைப்பில் நாம் சுட்டிக்காட்டியவற்றை மீண்டும் இங்கு நினைவூட்டுவது பொருத்தமானது.

*தமிழ்த் தேசிய உணர்வு என்ற மெய்மை நிலையை வெளிப்படுத்தி, நினைவூட்டி, அந்தத் தேசியத்தை ஐக்கியமுற வைத்து, ஒன்றுபடுத்தி நிற்பதற்கான பல்வேறு காரணிகளுள் தமிழ் ஊடகத்துறைக்கு - குறிப்பாக அச்சு ஊடகங்களுக்கு - கணிசமான பங்கு உண்டு.*

*இதனால், தமிழ்த் தேசிய உணர்வெழுச்சிக்கு எதிராக வெறுப்புக் கொண்டிருக்கும் பேரினவாதம் தனது ஆக்ரோசக் கண்ணை ஊடகத்துறையின்பால் - குறிப்பாகத் தமிழ் ஊடகத்துறையின் பக்கம் - திருப்பும் என்பது அவதானிகளால் அண்மைக்காலத்தில் எதிர்பார்க்கப்பட்டே வந்தது.*

*''தமிழ்த் தேசிய எழுச்சியை அடக்க வேண்டுமானால் அதன் ஊற்றுக்கண்ணாக இருப்பவற்றுள் ஒன்றான ஊடகத்துறையின் கரத்தை உடைக்கவேண்டும்.'' என்ற சிபாரிசு - மந்திரம் - புதிய அரசுத் தலைமைக்கு ஓதப்பட்டு வருவதை அரசுடன் செயற்படும் தமிழ்த் தரப்புகளே விசனத்துடன் பார்த்திருக்கும் நிலைமை இன்று. மூடிய அறைக்குள் ஆட்சேபம் தெரிவிப்பதைத் தவிர, அதற்கு அப்பால் அவற்றால் ஒன்றும் செய்யமுடியாது.*

*ஊடக அலுவலகத்துக்குள் புகுந்து சோதனை, தலைநகரில் பணி முடிந்து திரும்பிக்கொண்டிருந்த தமிழ் ஊடகவியலாளர்களும், தமிழ் ஊடகப் பணியாளர்களும் 'கிரிமினல்கள்' போல பொலீஸாரால் நடத்தப்பட்டமை போன்றவை எல்லாம் அடுத்துவரும் வேளைகளில் தமிழ் ஊடகவியலாளர்கள் சந்திக்கப் போகின்ற - அவர்களுக்கு நேரப் போகின்ற - அனர்த்தங்களுக்கு கட்டியம் கூறுவனவாகவே அமைந்திருக்கின்றன.*

*ஊடகங்களின் வாய்களை மூடுவதன் மூலம் - பேனாக்கள் தாங்கிய நாலாம் படையினரின் குரல்வளையை நசிப்பதன் வாயிலாக - தமிழ்த் தேசியத்தின் பேரெழுச்சியையும், அந்த எழுச்சியின் அடிநாதமாக அமையும் அதன் நியாயங்களையும் மூடி மறைத்து விடலாம் என ஆட்சியாளர்கள் நினைத்தால், அது வெறும் பகல் கனவாகவே முடியும்.*

*ஊடகச் சுதந்திரத்துக்குத் தடைவிதிப்பது அழிவை வெற்றிலை வைத்து வரவேற்கும் வேலையன்றி வேறில்லை.*

- அன்று இப்படி நாம் குறிப்பிட்டவற்றை மீண்டும் ஒரு தடவை விமல் வீரவன்ஸ போன்றோரின் கவனத்துக்குச் சமர்ப்பிக்கிறோம்.

# புனர்வாழ்வுக்கழக பணியாளர்களை விடுவிக்காவிடின் எமது பிரதிநிதிகளைப் பேச்சுக்கு அனுப்பமாட்டோம்!

## கிளிநொச்சியில் நேற்று மக்கள் திரண்டு கோஷம்

கிளிநொச்சி,பெப்.3

வெலிகந்தப் பகுதியில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்களை விடுவிக்குமாறு கோரி கிளிநொச்சியில் நேற்றுக் காலை பெரும் கண்டனப் பேரணி ஒன்று இடம்பெற்றது.

கிளிநொச்சி சந்திரன் பூங்காவிலிருந்து முற்பகல்10 மணிக்கு ஆரம்பமான பேரணி போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு செயலகத்தை அடைந்தது.

இந்தப் பேரணியில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரச, அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள், பொது மக்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

புனர்வாழ்வுக் கழகத்தின் பணியாளர்களை விடுவிக்காவிடின் எமது பிரதிநிதிகளை ஜெனிவாப் பேச்சுக்கு அனுப்பி வைக்கமாட்டோம் என்று பேரணியில் கலந்துகொண்டவர்கள் கோஷமெழுப்பினர். அரசபடைகளினதும் ஒட்டுக்குழுக்களினதும் அத்துமீறல்களைக் கண்டித்து பதாகைகளையும் சுலோக அட்டைகளையும் அவர்கள் தாங்கியிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சி பேரவையைச் சேர்ந்த பசுபதிப்பிள்ளை தலைமையில் கண்டனக் கூட்டம் இடம்பெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் உட்பட பல பிரமுகர்கள் கண்டன உரை ஆற்றினர்.

'மஹிந்த சிந்தனையில் மனிதக் கடத்தலும் ஒன்றா' 'ரி.ஆர்.ஓ.பணியாளர்களை விடுதலை செய்'' என்ற கோஷங்களையும் உரத்து ஒலித்தனர்.

மனித நேயப் பணியாளர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்று கோரும் மகஜர் கண்காணிப் புக் குழு அதிகாரியிடம் கையளிக்கப் பட்டது. (த)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரித் தொலைபேசியை இரவில் பயன்படுத்த முடியாத நிலை

### 'அம்புலன்ஸ்' வசதியைப் பெறுவது எப்படி எனக் கேள்வி

யாழ்ப்பாணம், பெப்.3

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் உள்ள தொலைபேசியை இரவுவேளைகளில் பயன்படுத்த முடியாத நிலை உள்ளதாக சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

வைத்தியசாலைத் தொலைபேசி மாவட்ட வைத்திய அதிகாரியாக பணிபுரியும் பல் மருத்துவரின் கிளினிக் அறையில் உள்ளது.

காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை பற்சிகிச்சை பிரிவு இயங்குகிறது.பிற்பகல் 4.30 மணிக்கு இப்பிரிவு மூடப்பட்டு மறுநாள் காலையில் திறக்கப்படுகிறது.ஞாயிறு மற்றும் பொதுவிடுமுறை தினங்களில் இப்பிரிவு இயங்குவதில்லை.

வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு மற்றும் அலுவலகம் ஆகியவை வேறு கட்டடங்களில் இயங்குவதால் வெளிநோயாளர் பிரிவுகளில் கடமையாற்றும் வைத்தியர்கள் இந்த தொலைபேசியை பயன்படுத்த முடிவதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

'உதயனில்' நேற்றுமுன்தினம் பிரசுரமான இரவுவேளைகளில் அம்புலன்ஸ் வண்டியை பொதுமக்கள் பயன்படுத்துவது தொடர்பான செய்தியை பார்த்த பின்னர் பொதுமக்கள், நோயாளர்கள் அபிவிருத்தி சபை உறுப்பினர்கள் போன்றோர் இத்தகவலைத் தெரிவித்தனர்.

இந்த தொலைபேசியை வெளிநோயாளர் பிரிவினை கவனிக்கும் மூன்று அறைகளில் ஒன்றில் பொருத்துவது 'அம்புலன்ஸ்' சேவையை பொதுமக்கள் பயன்படுத்த வசதியாக இருக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## மாதகல் குசுமன்துறை இந்துமயானத்தில் தகனக்கிரியை நடத்த படையினர் தடை

யாழ்ப்பாணம்,பெப்.3

மாதகல் - குசுமன்துறையில் உள்ள இந்து மயானத்தைத் தகனக்கிரி யைக்குப் பயன்படுத்துவதற்கு படையினர் தொடர்ந்தும் தடைவிதித்து வருவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

இதனால், மாதகல் பகுதியில் மரணிப்பவர்களின் உடல்களை சுமார் 7 மைல் தூரம் நடந்து சென்று மாதகல் சப்பல்துறை மயானத்தில் தகனஞ்செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்த மாதகல் நலன்புரிச் சங்கத்தின் தலைவரும் பண்டத்தரிப்பு ப.நோ. கூ. சங்கத்தின் பொதுமுகாமையாளருமான சு.வையிரவநாதன் :-

மாதகல் குசுமன்துறைப் பகுதியில் நீண்டகாலமாகத் தகனக்கிரியைகளை மேற்கொள்ளப்பயன்படுத்தப்பட்டு வந்த பகுதியை 04.01.2006 முதல் பயன்படுத்த அப்பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் தடைவிதித்துள்ளனர் - என்றார்.

இதற்கிடையில் மேற்படி விடயம் குறித்து மாதகல் இந்து அபிவிருத்திச் சங்கமும் மாதகல் கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து தடைவிதிக்கப்பட்ட குசுமன்துறைப் பகுதியில் தகனக் கிரியைகளை மேற்கொள்வதற்கு அனுமதி பெற்றுத்தருமாறு வலி.தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளரிடமும் -

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் ஊடாக யாழ்.அரச அதிபரிடமும் கோரிக்கை விடுத்துள்ளன. (எ-185)

### உதயவாக்கு

உள்ளத்தின் மகிழ்ச்சியே மனிதரை வாழவைக்கின்றது.அகமகிழ்வே மானிடரில் வாழ்நாளை வளரச் செய்யும்.

-வேதாகமத்திலிருந்து.

### நாளை

தை 22
சனிக்கிழமை
04.02.2006
திதி: ஷஷ்டி
முற்பகல்: 08.06 வரை
நட்சத்திரம் : அச்சுவினி
பின்னிரவு: 01.44 வரை
சுபநேரம் : 03.35-05.05
ராகுகாலம் : 09.35.-11.05
(யாவும் பழைய நேரப்படி)

## கொழும்பிலிருந்து வவுனியா வந்த பஸ்ஸில் கொள்ளையிட எடுத்த முயற்சி தோல்வி

யாழ்ப்பாணம்,பெப்.3

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி வந்த பஸ்ஸை வழிமறித்து கொள்ளையிட மேற்கொண்ட முயற்சி சாரதியின் சாமர்த்தியத்தினால் தடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு புத்தளத்திற்கும் - அனுராதபுரத்திற்கும் இடைப்பட்ட காட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி காட்டுப் பகுதியில் ஒரே உடை அணிந்த இருவர் பஸ்ஸினை மறித்து ஏறியதுடன் சாரதி மீது தாக்குதலைத் தொடுத்தனர் . எனினும் பஸ்ஸில் ஏறிய இருவரும் திருடர்கள் என்பதை ஊகித்துக்கொண்ட சாரதி தாக்குதலின் மத்தியிலும் உடனடியாகச் செயற்பட்டு பஸ்ஸினை இடைநிறுத்தாது தொடர்ந்து நகர்த்தினார் என்று கூறப்பட்டது.

இதேவேளை - குறிப்பிட்ட பஸ் நிறுத்தப்படாது தொடர்ந்தும் பயணிப்பதைக் கண்டுகொண்ட, கொள்ளையிடுவதற்கென காட்டுப் பகுதியில் மறைந்திருந்த ஏனைய கொள்ளையர்கள் பஸ்ஸின் மீது கல்வீச்சு நடத்தியுள்ளனர்.

இதற்கிடையில் - பஸ் சாரதி தாக்கப்படுவதைக் கண்ணுற்ற பஸ்ஸின் நடத்துநர் கொள்ளையர்களுடன் போராடி அவர்கள் இருவரையும் பஸ்ஸிருந்து நிலத்தில் தள்ளி விழுத்தியுள்ளார்.

பின்னர் அப்பகுதியில் உள்ள பொலீஸ் நிலையத்திற்கு பஸ்ஸினைக் கொண்டு சென்ற பஸ் சாரதி நிலைமையை விளக்கி முறையிட்டார் என்றும் -

உடனடியாக பொலீஸார் ஸ்தலத்திற்குச் சென்றவேளையில் கொள்ளையர்கள் அங்கிருந்து மறைந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

HR - XXXX என்னும் தொடர்பு இலக்கத்தையுடைய HERO HONDA SS (BACHE) என்னும் மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: துஷி, மிருசுவில் வடக்கு வீதி, மிருசுவில். T.P.: 077 6679518 (46295)

## கார் விற்பனைக்கு

19-XXXX தொடர் இலக்கமுடைய வெள்ளை நிற நிசான் சணி கார் (25th ANIVERSARY Model) Full obtion உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 077- 3053064 (46293)

## வீடுகள் விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, டிப்போவிற்கு அருகில் நவீன முறையில் புதிதாகக் கட்டப்பட்ட சகல வசதிகளுடன் அமைந்த வீடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.கலைச்செல்வன், பலாலி றோட், இராமகிருஷ்ணா பாடசாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். T.P. 0773053063. (46076)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், 3ஆம் குறுக்குத்தெரு, பிரதான வீதி மக்கள் வங்கிக்கு அருகில் சகல வசதியும் கொண்ட மாடி வீடு வாடகைக்கு உண்டு. அரசு சார்பற்ற நிறுவனங்களுக்கு உகந்தது. தொடர்பிற்கு: 0777 - 250850 (46269)

## மணமக்கள் தேவை

ஆஸ்திரேலியாவில் பிரஜாவுரிமையுடைய 40 வயது எஞ்சினியருக்கு மணமகளும், 35 வயதுடைய M.B.A. பட்டதாரியும் கெமிக்கல் எஞ்சினியருமான மணமகளுக்கு மணமகனும் தேவை. விவரங்களுடன் தனித்தனி சாதகக்குறிப்பு அனுப்பவும். தகுதியுடைய, பொருத்தமானவர்கள் மட்டும் கடிதம் மூலம் தொடர்புகொள்ளவும். தொடர்பிற்கு: ஸ்ரீலஸ்ரீ சு.சிவஷண்முகானந்தக் குருக்கள், கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை. (46082)

## தவறிவிட்டது

8ஆம் வட்டாரம், மண்டைதீவு என்னும் முகவரியைச் சேர்ந்த வியாகரத்தினம் செல்வநாயகி என்பவரது தேசிய அ.அட்டை 505820401V செவ்வாய்க்கிழமை 31.01.2006 இல் யாழ்.நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியு டன் அல்லது 280, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (சத்திரத்துச் சந்தி) என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். T.P.:021 222 5688 (46266)

WPJX XXXX என்ற தொடரிலக்கமுடைய CT 100 இன காப்புறுதிப் பத்திரமும் வரிப் பத்திரமும் முத்திரைச்சந்திக்கும் கச்சேரி சந்திக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். இல.55, அரச வீதி, நல்லூர் T.P.: 077 6660653, 0773296407 (46264)

# 5 ஆம் ஆண்டு நினைவாக

## அமரர் சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை

மலர்வு
30 - 05 - 1930

உதிர்வு
03 - 02 - 2001



பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
எங்களை வழி நடத்திய
அன்புத் தெய்வமே!
ஆண்டு ஐந்து நகர்ந்தாலும்
உங்கள் நினைவுகள் நீங்காதையா!
அரவணைத்த கை எங்கு சென்றது
அன்பு மொழி பேசிய குரல் எங்கு மறைந்தது
நித்தம் நித்தம் தேடுகிறோம்
நிஜமாய் அருகில் வாருங்கள்
எங்கள் கண்ணீர்ப் பூங்களால் அர்ச்சித்து
ஆண்டவன் அடியில் உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

*உம் பிரிவால் துயருறும்:*
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(46301)(18.26.19.45)

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி கந்தையா கிறேஸ் மல்லிகை

(இளைப்பாறிய ஆசிரியை, உரும்பிராய், றோ.க.பாடசாலை)

25 வருடங்களுக்கு முன் எமது பாடசாலையில் நற்பணியாற்றிய இவர் 29.01.2006 ஞாயிற்றுக்கிழமை ஏழாலையில் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயரடைவதோடு, துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/உரும்பிராய் றோ.க.பாடசாலை,
உரும்பிராய்.

*அதிபர், ஆசிரியர்கள்,*
*பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.*

(46298)(26.19.45)

## பட்மின்ரன் உபகரணம் கையளிக்கும் நிகழ்வு

இலங்கை பட்மின்ரன் சங்கத்தினால் யாழ்.மாவட்ட பட்மின்ரன் சங்கத்திற்கென வழங்கப்பட்ட பட்மின்ரன் உபகரணங்களை வெற்றியீட்டிய வீரர்களுக்கு வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 3மணியளவில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய அதிபர் எஸ்.சர்வேஸ்வரன் கலந்துகொள்வர்.(எ-190)

## சமையல் எரிவாயுவின் விலை அதிகரிப்பு

வீட்டுப் பாவனைக்குப் பயன்படும் 12.5 கிலோ கிராம் சமையல் வாயுவின் விலை கடந்த திங்கட்கிழமை முதல் 130 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வடபகுதியில் 1120 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட 12.5 கிலோ கிராம் ஷெல் காஸின் விலை 1250 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 37.5 கிலோ கிராம், 2.4 கிலோ கிராம் காஸ் சிலிண்டர்களின் விலையில் எந்தவித மாற்றமும் இல்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-202)

## நகரசபை - சாவகச்சேரி

# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் 16-02-2006ஆம் திகதி 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதேதினம் 10.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளின் பொருட்டு நிர்மாணப்பயிற்சி நிலையத்தில் *(இக்ராட்) "தரம் எம்9"* அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுபெற்ற ஒப்பந்தகாரர் மாத்திரமே கேள்விப்பத்திரங்கள் கோருவதற்கு தகைமையுடையவராவார்.

ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் ரூ. சதம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (வற்றுடன்) ரூ. சதம் |
|---|---|---|---|
| 01 | அலுவலகக் கட்டடத் திருத்தம் (கட்டம் III) | 4,000.00 | 575.00 |

கேள்விப்பத்திரங்களை சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 14-02-2006 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை மேற்குறித்த கேள்வி வைப்புப்பணத்தையும் கேள்விப் படிவக் கட்டணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி *"செயலாளர், நகரசபை, சாவகச்சேரி"* என்ற முகவரிக்கும். இணைப்பிரதி *"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பண்ணை வீதி, யாழ்ப்பாணம்"* என்ற முகவரிக்கும் 16-02-2006ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

*நகரசபை அலுவலகம்,*
*சாவகச்சேரி.*
*01-02-2006* (சி/47663)(26-19-45)

**திருமதி கு.ஆறுமுகம்,**
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

## வேலையாள்கள் தேவை

*எமது நிறுவனத்திற்கு அலுமினியம் பொருத்துதல் வேலை செய்யக் கூடிய அனுபவம் உள்ள வேலையாள்கள் உடன் தேவைப்படுகின்றனர்.*

*தகுதி உள்ளவர்கள் காரியாலயத்திற்கு நேரில் வரவும்.*

**பூநரோவில்**
*866, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி இல.021 222 2849*

(46304)
(26.19.45)

# மரண அறிவித்தல்



## திருமதி திரேசம்மா அருள்ராசா

யாழ்.நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேசம்மா அருள்ராசா அவர்கள் 31-01-2006 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தீயோ அருள்ராசா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை - ஆனாசி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அருளானந்தம் (முன்னாள் உரிமையாளர், மரியா ஹோட்டல்), திருமதி மொனிக்கம்மா, திருமதி. அந்தோனியாப்பிள்ளை, திருமதி மாசில்லா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் திருமதி. மேரி (இன்பம் -நோர்வே), அருட்சகோதரி சகாயமரி (நல்லாயன் கன்னியர் சபை - எட்டியாந்தோட்டை), திருமதி யோகம் (நோர்வே), திருமதி றோசா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயும் நவீந்திரன் (நோர்வே), உதயன் (நோர்வே), யோண் பிறிற்றோ (நோர்வே) ஆகியோரின் அன்புமிகு மாமியாரும் காலஞ்சென்ற திருமதி அ.ஜெயமணி, காலஞ்சென்ற நீ.எஸ்தாக்கி (முன்னாள் அதிபர்), தொ.அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்ற செ.மைக்கல்தாசன் (முன்னாள் இ.போ.ச.பரிசோதகர்), காலஞ்சென்ற பத்திநாதர் (முன்னாள் யாழ்.வாடிவீட்டு உரிமையாளர்), திருமதி அற்புதமுத்து, காலஞ்சென்ற திருமதி சின்னமணி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் நோர்வேயை வசிப்பிடமாகக் கொண்டவர்களான நவீயா, ஜெறோசன், ஸ்ரீபன் றாஜ், பிரசன்னா, பீலிக்ஸ், சொபியா, சில்வியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அருட்தந்தை அ.ம.ஸ்ரீபன் (இலங்கை அதிபர் செபமாலை தாசர் சபை), அருட்சகோதரன் மை.ஜீசஸ் பிரபு (பிலிப்பைன்ஸ்), நல்லாயன் கன்னியர்மட அருட்சகோதரிகளான பற்றிமா (நீர்கொழும்பு), நிக்கொலின் (இணுவில்) ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (04-02-2006) சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று திருப்பலிக்காக சென்மேரிஸ் தேவாலயத்திற்கு எடுத்துச் சென்று பின் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென்மேரிஸ் வீதி,
நாவாந்துறை.

(46302)26-19-45)

தகவல்:
**பிள்ளைகள்.**


புத்தாண்டில் ASIAN-CSC வழங்கும் கணினி கற்கைநெறிகளுக்கான புலமைப்பரிசில் பரீட்சை இம்முறையும் 7வது தடவையாக நடைபெறுகின்றது. இப்பரீட்சைகள் பொது அறிவு மற்றும் O/L பாடத்திட்டத்தை சார்ந்ததாக அமையும். தமிழ் அல்லது ஆங்கில மொழியில் வினாத்தாள்களை தெரிவு செய்யலாம்.

MEGA 2006
Win 75% Scholarship



குறிப்பு :
- ஒருவர் ஒரு முறை மட்டுமே பரீட்சை எழுதலாம்.
- ஒவ்வொரு முறையும் வினாத்தாள்கள் வெவ்வேறாக அமையும்.
- இம்முறை பரீட்சைகள் எமது பயிற்சி நிலையங்களில் நடைபெறும்.

Registered with Tertiary and Vocational Education Ministry

ஒரு மணித்தியாலம் மட்டுமே நடைபெறும் சிறப்புத்தேர்வை ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் 2-02-2006 தொடக்கம் 16-02-2006 வரையான காலப்பகுதியில் எழுதி 75% வரையிலான புலமைப்பரிசிலினை பெற்றுக்கொள்ளலாம் மேலதிக விபரங்களுக்கு உங்கள் அருகிலுள்ள ASIAN-CSC கிளைகளை நாடுங்கள்.

ASIAN COMPUTER SYSTEMS

யாழ்ப்பாணம் : 2 G, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். Tel : 021-222 5677
யாழ்ப்பாணம் : CSC -101, 2ம் மாடி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் Tel : 021-222 8196
சுன்னாகம் : 108, K. K. S. வீதி, (Jet Motors) சுன்னாகம். Tel : 021-2501589
நெல்லியடி : கொடிகாமம் ரோட், நெல்லியடி. Tel : 077 - 3122198
சாவகச்சேரி : கண்டி வீதி, சாவகச்சேரி. Tel : 077-3039587


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்லமெய்வன்மைப் போட்டி நாளை

யாழ்ப்பாணம்,பெப்.3

அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வீ.ஓங்காரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக ஊர்காவற்றுறைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.பாஸ்கரன் கலந்துகொள்வார். (த-12)

# குடாநாட்டு விவசாய சம்மேளனங்களுக்கு நெல் அறுவடை செய்யும் இயந்திரங்கள்

## ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.3

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மாவட்ட கமநல சேவைத் திணைக்களத்தினால் யாழ். மாவட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட 13 விவசாய சம்மேளனங்களுக்கு நெல் அறுவடை செய்யும் இயந்திரங்களை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை மாவட்ட கமநல சேவைத் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்ட கமநல சேவைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் க.சுந்தரேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் கலந்துகொண்டு அறுவடை இயந்திரங்களை வழங்கவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள், விவசாயத் திணைக்கள உதவி விவசாயப் பணிப்பாளர், சம்மேளனங்களின் தலைவர்கள், செயலாளர்கள் உட்படப் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொள்வர்.

இடைக்குறிச்சி, மட்டுவில் வடக்கு, நாவற்குழி கிழக்கு, மானிப்பாய் மேற்கு, காரைநகர், குடத்தனை, செம்பியன்பற்று, இருபாலை தெற்கு, கரணவாய் மத்தி, கரவெட்டி மத்தி, புத்தூர் கிழக்கு, வேலணை வட கிழக்கு, மாதகல் ஆகிய விவசாய சம்மேளனங்கள் இந்த இயந்திரங்களைப் பெறவுள்ளன.

இந்நிகழ்வின் இறுதியில் அறுவடை இயந்திரத்தைப் பெறும் விவசாய சம்மேளனங்களின் அங்கத்தவர்களுக்கு இயந்திரத்தின் பாவனை தொடர்பான செய்முறை விளக்கமும் அளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-12-14)

# யாழ். சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் அனுராதபுரத்துக்கு!

## பாதுகாப்புக் கருதி நடவடிக்கை

கச்சதீவுக் கடற்பகுதியில் வைத்து கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் ஐவர் நேற்றுமுன்தினம் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 25ஆம் திகதி இரவு 9 மணியளவில் கச்சதீவுக் கடற்பகுதியில் சந்தேகத்துக்குரிய முறையில் நடமாடிய கப்பல் ஒன்றினைக் கடற்படையினர் வழிமறித்து சோதனையிட்டபோது அதற்குள் வெடிபொருள்கள் இருந்தன என்றும் - இதனையடுத்து அதில் இருந்த ஐந்து இந்திய மீனவர்களும் கைதுசெய்யப்பட்டனர் என்றும் கூறப்பட்டது. ஐவரும் பின்னர் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

ஊர்காவற்றுறை நீதிவான் பா.சுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட இவர்களை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் பேரிலேயே நேற்றுமுன்தினம் இவர்கள் அனுராதபுரம் சிறைச்சாலைக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டனர் - என்று தெரிவிக்கப்பட்டது. (த-13)

# நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த தபால் ஊழியருக்கு நியமனக் கடிதம்

## விரைவில் அனுப்பிவைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ். பிரதம அஞ்சலகத்தில் நடத்தப்பட்ட தபால் ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கான நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படுவோருக்கான நியமனக் கடிதங்கள் விரைவில் அனுப்பிவைக்கப்படும் என யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இந்த நேர்முகப் பரீட்சை இரு அமர்வுகளாக 5 தினங்களுக்கு நடத்தப்பட்டது. பிரதி அஞ்சல் அதிபர் நாயகம், பிரதம தபால் அதிபர், பிராந்திய கணக்காளர் ஆகியோர் அடங்கிய குழு இந்த நேர்முகப் பரீட்சையை நடத்தியது.

நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் பிரிவிலும் ஒரே சமயத்தில் இந்த நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

நாட்டில் அண்மையில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக இந்நேர்முகப் பரீட்சை 3 தடவைகள் பிற்போடப்[illegible]ம தெரிந்ததே.

நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றியோ[illegible]ரின் பெறுபேறுகள் அனைத்தும் உடனடி அஞ்சல் அதிபரின் அனுமதிக்காக கொழும்பு தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அஞ்சல் அதிபதி ஊழியர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கான நியமனங்களை வழங்குவார் எனத் தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-12-14)

# திருமண நாள் கொண்டாட்டத்தில் வெடி கொளுத்தியதால் திண்டாட்டம்!

கோண்டாவில்,பெப்.3

திருமண நாளின் ஓராண்டு நினைவை இரவு வேளையில் பட்டாசு கொளுத்திக் கொண்டாடி மகிழ்ந்தார் ஒருவர். நீண்டநேரமாக - தொடர்ச்சியாக - பட்டாசு கொளுத்தி அவர் குதூகலித்துக் கொண்டிருக்க, அந்த வெடிச்சத்தங்களைக் கேட்டு அந்தப் பகுதி மக்கள் எல்லோரும் என்னவோ ஏதோ என்று பதறியடித்துக்கொண்டி ஓடிப்போய் வீடுகளுக்குள் முடங்கிக்கொண்டனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமையன்று கோண்டாவில் டிப்போ சந்திக்குச் சமீபமாக இடம்பெற்றிருக்கிறது. பட்டாசு என்றால் ஒன்று இரண்டல்ல. கோர்வைகோர்வையாக வாங்கிக்குவித்துவிட்டு நீண்ட நேரம் - தொடர்ச்சியாக - அவற்றை வெடிக்கவைத்துக் குதூகலித்தார் அவர்.

பட்டாசுச் சத்தம் கேட்டதும் கோண்டாவில் படைமுகாமில் இருந்த இராணுவத்தினரும் பதிலுக்கு வானத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இப்படியாக தொடர்ச்சியாகக் கேட்ட வெடிச்சத்தங்களினால் அந்தப் பகுதி மக்கள் கலவரமடைந்தனர். என்னவோ ஏதோ என்று பதறியடித்துக்கொண்டு மின்விளக்குகளை அணைத்துவிட்டு கதவுகளை இழுத்துப் பூட்டிக்கொண்டு தத்தமது வீடுகளுக்குள் முடங்கிவிட்டனர்.

இராணுவத்தினருக்கும் வேறு குழுவினருக்கும் இடையில் துப்பாக்கிச் சண்டை நடக்கிறது என்று நினைத்துக்கொண்ட மக்கள் அதனால் தமக்கு ஏற்படக்கூடிய ஆபத்தை எண்ணிப் பீதியடைந்தனர்.

அன்று இரவு தமது வீட்டுக்குள் படையினர் நுழைந்து சோதனையிடவும் துன்புறுத்தவும் கூடும் என்று ஏங்கி, அப்பகுதி மக்களில் பெருமளவானோர் அன்றைய இரவைத் தூக்கம் இன்றியே கழித்திருக்கின்றனர்.

விடிந்தபிறகு விசாரித்தபோதுதான் மக்களுக்கு விடயம் தெரியவந்தது.

நிலைமை உணராமல் - நாட்டு நடப்பு புரியாமல் இப்போதைய சூழ்நிலையில் அதுவும் இரவுவேளையில் பட்டாசு கொளுத்தி திருமண நாளைக்கொண்டாடுவது அவசியம்தானா என்று தமக்குள் விசனத்துடன் உரையாடி மக்கள் பிரஸ்தாப நபரைத் திட்டித் தமது ஆத்திரத்தைத் தீர்த்துக்கொண்டனர். (த-49)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## கண்ணபுரம் பகுதியிலுள்ள கழிவுவாய்க்கால் புனரமைப்பு

ஐக்கிய நாடுகள் வதிவிட நிறுவனம் (யூ.என். கபிரட்) 'சமூகங்களை மீள்கட்டி எழுப்புதல்' என்னும் திட்டத்தின்கீழ் யாழ். மாநகர சபை எல்லைக்குள் தெரிவுசெய்யப்பட்ட 10 கிராமங்களில் உருவாக்கப்பட்டுள்ள சமூக அபிவிருத்திச் சபைகளின் ஊடாக வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில் கண்ணபுரம் பகுதியில் உள்ள கழிவுநீர் வாய்க்கால் புனரமைப்புச் செய்யப்படவிருக்கிறது. சமூக அபிவிருத்திச் சபையினரால் மேற்கொள்ளப்படவுள்ள இந்தப் புனரமைப்புப் பணிக்கான ஆரம்ப நிகழ்வு இன்று காலை 9 மணியளவில் இடம்பெறவுள்ளது. யூ.என்.கபிரட் நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகத்தர் இராசதுரை இந்தத் தகவலைத் தெரிவித்தார். (த-190)

# இராணுவக் கெடுபிடிகளிலிருந்து மக்களை பாதுகாப்பது தொடர்பாக விரைவில் மாநாடு!

## யாழ்.மனித உரிமைக்குழு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.3

குடாநாட்டில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள், இராணுவத்தின் கெடுபிடிகள் என்பவற்றிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பது தொடர்பான விசேட பாதுகாப்பு மாநாடு ஒன்று மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

பெரும்பாலும் அடுத்த வார முற்பகுதியில் இந்த விசேட மாநாடு இடம்பெறும் என்று ஆணைக்குழுவின் அலுவலக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இந்தப் பாதுகாப்பு மாநாட்டிற்கு யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர்களும் அழைக்கப்படவுள்ளனர்.

வன்முறைச் சம்பவங்களில் இராணுவத்தின் கெடுபிடிகள், சுற்றிவளைப்புகள், காணாமற்போதல்கள் ஆகியவற்றின் போது கிராம சேவையாளர்கள் பிரசன்னமாகி - தலையிட்டு உடனடியாக அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தவறும் பட்சத்தில் அது தொடர்பான விவரங்களை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரியப்படுத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளவேண்டும்.

இது தொடர்பான விடயங்கள் குறித்தே மாநாட்டின் போது ஆராயப்படவிருப்பதாக தெரியவருகிறது. (த-13)



புங்குடுதீவு மக்களுக்கான குறைகேட்பு நிகழ்வில் யாழ். அரச அதிபர் க.கணேஸ் உரையாற்றுவதை முதலாவது படத்திலும் அரச அதிபரிடம் கடற்றொழிலாளர்கள் சார்பில் மகஜர் கையளிக்கப்படுவதை இரண்டாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்ட மக்களில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம். நிகழ்வை ஏற்பாடு செய்த அருள்மிகு அந்தோனியார் தெய்வக்குழந்தைகள் இல்லத் தலைவர் க.பூராசா, பேராசிரியர் கா.குகபா

(படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் எம் விழிநீர் அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணகப் பிறப்பு
05 . 08 . 1931



விண்ணகப் பிறப்பு
05 . 01 . 2006

கலைமகிழ்நன், கலாபூஷணம்

### கந்தையா பாலசிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

எமது குடும்ப ஒளி விளக்காக விளங்கியவரும் எமது பேரன்பிற்கும் மதிப்பிற்குமுரியவருமாகிய எனது தந்தையார் கலாபூஷணம் உயர்திரு. கந்தையா பாலசிங்கம் அவர்கள் 05.01.2006 வியாழக்கிழமை மதியம் இறைபதமடைந்த செய்திகேட்டு உடன் விரைந்துவந்து எமக்கு ஆறுதலும் ஒத்தாசையும் நல்கியதுடன், இறுதிக்கிரியைகள் தொடர்பான சகல கருமங்கள், செயற்பாடுகளிலும் தன்னார்வத்துடன் தம்மை முழுமையாக அர்ப்பணம் செய்து எமது குடும்பத்தின் பிரிவுத்துயரில் தம்மையும் உணர்வுபூர்வமாக ஈடுபடுத்தி எமக்கு தோளோடு தோள்கொடுத்து எமக்குத் தெம்பூட்டிய அனைத்து இளைஞர்கள், பெரியோர்கள், யாவருக்கும் எமது குடும்பம் சார்பாக மனங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், தந்தையாரின் இறுதிச்சடங்கு நிகழ்வின்போது மனமுருகி கண்ணீர் அஞ்சலி துண்டுப்பிரசுரங்களை வெளியீடு செய்த பொது அமைப்புகள், குடும்பங்கள், தனிநபர்கள் யாவருக்கும் மற்றும் இறுதிச்சடங்கு நிகழ்வில் கலந்துகொண்ட அனைத்து பாச உள்ளங்களுக்கும் எமது குடும்பம் சார்பாக உள்ளம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாளை (04.02.2006) சனிக்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியை வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன விருந்துபசாரத்திலும் பங்குகொண்டு சிறப்பித்து அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்திற்குப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

மு.கு: தனிப்பட்ட அழைப்புகள் கிடைக்கப் பெறாதவர்கள் இவ் அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(46230)

"செந்தில் பதி",
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

தகவல்:
பாலசிங்கம் பிரபாகரன் (மகன்).


# அரசமைப்புச் சபை உறுப்பினரை நியமிக்க உத்தரவிடுமாறு கோரி மனுத்தாக்கல்

கொழும்பு, பெப்.3

அரசமைப்பின் 17ஆவது திருத்தத்தின் கீழ் அரசமைப்புச் சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்காக சம்பந்தப்பட்ட பிரதிவாதிகளுக்கு உத்தரவிடுமாறு கோரி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கடந்த செவ்வாய்க்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருக்கிறது.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்கு பண்டார, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, சட்டமா அதிபர் கே.ரி. கமலசபேசன், பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பலர் உள்ளடங்கலாக 51 பேர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரசமைப்புச் சபை இயங்காமை குறித்தும் அதற்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படாமை குறித்தும் தனது மனுவில் சுட்டிக்காட்டியிருக் கும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், உறுப்பினர்களை நியமிக்க பிரதிவாதிகளுக்கு உத்தரவிடுமாறும் நீதிமன்றத்தைக் கேட்டிருக்கிறது.

அதேசமயம், அரசமைப்புச் சபையின்றி பொலீஸ் திணைக்களத்தில் நியமனங்கள், பதவியுயர்வுகள், நன்னடத்தை விசாரணைகள் என்பவற்றை மேற்கொள்ளாதிருக்கும் வகையில் பொலீஸ்மா அதிபருக்குத் தடையுத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தனது மனுவில் கேட்டிருக்கிறது.

## பொஸ்கோ வித்தியாலயத்தில் கணனிப் பயிற்சி நெறி

யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் கல்விகற்கும் மாணவர்களுக்கான அடிப்படைக் கணனி வகுப்புகள் கடந்த சனிக்கிழமை யாழ் .புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் ஆரம்பமாகியுள்ளன.

இவ்வகுப்புகளை யாழ். நாவலர் வீதியில் கிளை அலுவலகத்தைக் கொண்டு இயங்கிவரும் ஐ.டி.எம் கணனி நிறுவனத்தினர் நடத்திவருகின்றனர்.இக்கணனி வகுப்புகளில் சேர்ந்து பயில்வதற்கு இவ் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் தரம் 1 தொடக்கம் தரம் 4வரையான வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமே இவ்வித்தியாலயத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இக்கற்கைநெறி வகுப்புகள் வார விடுமுறை நாட்களான சனி,ஞாயிறு தினங்களில் மட்டுமே நடைபெற்று வருகின்றன. (த- 51)


## நெஞ்சைவிட்டகலா முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
16 . 11 . 1936



இறப்பு
16 . 01 . 2005

### திருமதி இராசமலர் கந்தையா

(பாவலர் துரையப்பா வீதி, தெல்லிப்பழை)

திதி: பூர்வபக்க சஷ்டி (03.02.2006)

கண் கண்ட தெய்வம் நீ அம்மா – எங்களை
கண்ணை இமை காப்பதுபோல் காத்திட்டீர்
உறவின் சிகரம் நீ அம்மா – எம்
உறவை வளர்த்திட உயிரானீர்!
வளமாய் வாழ்ந்தவள் நீ அம்மா– எமக்கு நல்
வாழ்வை அமைத்திட்ட நீர் வள்ளலம்மா!
இன்று உங்கள் ஆத்மா சாந்திபெற – நாம்
இறைஞ்சுகின்றோம் தெல்லியம்பதி துர்க்காபுரத்தாள் திருப்பாதம்.

[46225]

இல. 32, பேரின்பநாயகம் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணுக்கு குணமாக
05 . 02 . 1952



விண்ணுக்கு செல்வமாக
04 . 01 . 2006

### அமரர் சதாசிவம் குணச்செல்வம்

(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)

நித்திய தூக்கத்தில் உன் விழிகள்
தூங்காத கண்கள் இங்கே உன்நினைவில்
துடித்துத் துவள்கின்றோம் சோகத்தில்
நேற்றுப்பார்த்த முகம்
நேற்றுக்கேட்ட குரல் யாவும்
காற்றில் ஆடிவரும் வெள்ளமென
மாறி மாறியே எம் மனவலையில் மோதுகின்றதே!

(46126)

இன்று (03.02.2006) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன வைபவத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.

குடும்பத்தினர்.



## தொழில் வாய்ப்புகள்

மலேசியா, சிங்கப்பூர், மத்தியகிழக்கு நாடுகளில் தொழில்வாய்ப்பு பெறக்கூடிய முறையில் 100% செய்முறை பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்பட்டு சான்றுதழ் வழங்கப்படுவதுடன் வேலைவாய்ப்பும் பெற்றுக்கொடுக்கப்படும்.

**Radio, T.V and Video DeckREPAIRING**

RADIO, Television, Video Deck, Satellite Antenna, CD Player, UPS, Printer, Moniter ( காலம் 10 மாதம்)

**ELECTRICALWIRING AND REWINDING**

வீட்டு மின்னிணைப்பு, Single Phase, Three Phase, தொழிற்சாலைகளின் மின்னிணைப்பு, மோட்டார், மின் விசிறி, ரான்ஸ்போமர்கள், ஜெனரேற்றர் ( காலம் 06 மாதம்)

**REFRIGERATIONANDAIRCONDITIONING**

Refrigerator, Deepfreezer, Split Type AC, Wondow A/C, Package AC, Central Plant AC ( காலம் 07 மாதம்)

**MOTORCYCLEMECHANISAM**

சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். ( காலம் 06 மாதம்)

**Mobile Phone Repairing Course**

Hardware, Hardware Repairing, Software, Software Trouble Shooting, Phone Lock ( காலம் 01 மாதம்)

**Deploma Hardware Engineering** ( காலம் 03 மாதம்)

ஆரம்பம் :-05,06.02.2006

மேலதிக விபரங்களுக்கு

JAFFNA TECHNICAL INSTITUTE
இல. 07, பலாலி வீதி யாழ்ப்பாணம்.
Regd. No: 15251 T.P:- 021-222 3335



## இரண்டாம் ஆண்டு நினைவுகள்



காசியப கோத்திரம்

அமரர் பிரம்மஸ்ரீ சபாபதி ஐயர் (சிவகடாக்ஷக்குருக்கள்)

[பிரதம குரு - நுணாவிற்குளம் கண்ணகை அம்மன் கோயில்]

மலர்வு 18.06.1938 சிரார்த்த திதி: 03.02.2006 உதிர்வு 26.01.2004

இன்று (03.02.2006) வெள்ளிக்கிழமை காலை மேற்படி ஆலயத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி அபிஷேக பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீ கண்ணகை அம்மன் கோயில், நுணாவிற்குளம், சாவகச்சேரி. - குடும்பத்தினர். (46276)


## இறக்குமதியாகும் மா, அரிசியின் சுங்கத்தீர்வைகள் அதிகரிப்பு

கொழும்பு, பெப்.3

இறக்குமதியாகும் கோதுமைமாவின் சுங்கத்தீர்வையை 10 ரூபாவாலும் இறக்குமதியாகும் அரிசியின் சுங்கத்தீர்வையை 9 ரூபா விலிருந்து 20 ரூபாவாகவும் அரசு உடனடியாக அதிகரித்திருக்கின்றது.

உள்நாட்டில் உற்பத்தியாகும் நெல்லை சந்தைப்படுத்துவதில் விவசாயிகள் எதிர்நோக்கக்கூடிய கஷ்டங்களைப் போக்கும் விதத்தில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு அறிவித்துள்ளது.

நெல்உற்பத்தி செய்யும் விவசாயிகள் விரைவில் அறுவடையில் ஈடுபடவிருப்பதாலும் தமது நெல்லுக்கு உரிய விலைகளைப் பெற்றுக்கொள்ள அவர்கள் சிக்கல்களை எதிர்கொள்ளக்கூடும் என்று கருதப்படுவதாலும் அமைச்சு மேற்கண்ட நடவடிக்கையை எடுத்திருக்கின்றது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்சிலைமடு பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் முன்மாதிரிச் செயற்பாடு!

ஒட்டுசுட்டான்,பெப்.3

கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நீண்ட காலமாக நிரந்தர நியமனமும் இன்றி - எந்தவிதமான ஊதியமும் அற்ற நிலையில் கடமையாற்றிவரும் தொண்டர் ஆசிரியர்கள் நால்வருக்கு கணிசமான கொடுப்பனவையேனும் வழங்குவதற்கு மாணவர்களின் பெற்றோர்கள் சிலர் முன்வந்திருக்கின்றனர்.

இப் பாடசாலையில் பல வருடங்களாக ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகிறது. இந்தப் பற்றாக்குறையை ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் முகமாக தொண்டர் ஆசிரியர்கள் நால்வர் சேவையாற்றி வந்தனர். அவர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவதில்லை. அரசினால் தொண்டர் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட நிரந்தர நியமனத்திலும் அவர்கள் உள்வாங்கப்படவில்லை என்று கூறப்பட்டது.

இந்த நிலையில் தொண்டர் ஆசிரியர்களின் நிலையைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு குறைந்தளவிலாவது ஊதியம் வழங்கப்பட வேண்டும் எனச் சுட்டிக் காட்டப்பட்டதையடுத்து. இதற்கென தம்மால் இயன்ற தொகை ஒன்றை மாதாந்தம் வழங்குவதற்குப் பெற்றோர்கள் சிலர் முன்வந்திருக்கின்றனர்.

இவ்வாறு பெற்றோர்களால் வழங்கப்படுகின்ற நிதித் தொகையைத் தொண்டர் ஆசிரியர்கள் நால்வருக்கும் மாதாந்தம் பங்கிட்டு வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பாடசாலையின் பெற்றோர்களுடைய முன்மாதிரியிலான செயற்பாட்டுக்கு கோட்டக்கல்வி அதிகாரி சி.ஜெயபாலன் பாராட்டுத் தெரிவித்திருக்கின்றார்.

ஏனைய பல பாடசாலைகளிலும் கொடுப்பனவுகள் எவையும் இன்றி பல தொண்டர் ஆசிரியர்கள் சேவையாற்றி வருகின்றார்கள். அந்தப் பாடசாலைகளின் பெற்றோர்களும் இந்த முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். (த-341)

## கழிவு அகற்றும் தொட்டிகள்

புதுக்குடியிருப்பு,பெப்.3


புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு உட்பட்ட அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பிரதேச சபை கழிவகற்றும் தொட்டிகளை வழங்கியுள்ளது.

'வேல்ட் விஷன்' நிறுவனத்தால் கழிவகற்றும் தொட்டிகள் பிரதேச சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

உக்கும் கழிவுகளுக்கு கறுப்புநிறத் தொட்டிகளும் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் கழிவுகளுக்குப் பச்சை நிறத் தொட்டிகளும் உடைந்த கண்ணாடிக் கழிவுகளுக்கு நீல நிறத் தொட்டிகளும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கழிவுகளை அகற்றும் பணியில் பிரதேச சபையினர் ஈடுபட்டுள்ளனர்.

(த-353-202)





கிளிநொச்சி மத்திய கல்லூரியின் சிறுவர் பூங்காவில் மரம் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இளைப்பாறிய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி கௌரி சந்திரசேகரம், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரியும் கல்லூரியின் பழைய மாணவியுமான செல்வி அனுஷா பத்மநாதன் மரக்கன்றுகளை நட்டு வைப்பதைப் படங்களில் காணலாம். *(படங்கள்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)*

## மாமனிதர் சச்சிதானந்தசிவத்துக்கு நுண்கலைக் கல்லூரியில் அஞ்சலி

கிளிநொச்சி,பெப்.3

மாமனிதர் சச்சிதானந்தசிவத்தின் நினைவு நிகழ்வு நேற்றுமுன்தினம் முள்ளியவளை நுண்கலைக் கல்லூரியில் இடம்பெற்றது.

ஓவியர் ராஜன் தலைமையில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை நிதர்சன திரைப்பட உருவாக்கப் பிரிவுப் பொறுப்பாளர் சங்கர் ஏற்றினார். மாமனிதர் சச்சிதானந்த சிவத்தின் திருவுருவப் படத்திற்கான ஈகச் சுடரை முள்ளியவளை தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த என்.எஸ்.மணியம் ஏற்றினார்.

திருவுருவப் படத்திற்கான மலர் மாலையை ஓய்வுபெற்ற அதிபர் எ.மகாலிங்கம், ஓய்வுபெற்ற ஆசிரியர் பாலசிங்கம் ஆகியோர்அணிவித்தனர்.

நினைவுரைகளை முள்ளியவளை நுண்கலைக் கல்லூரி அதிபர், தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம், ஓவியர் ராஜன், துணுக்காய் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் விஜயரட்ணம் ஆகியோர் நிகழ்த்தினர். இந்த நிகழ்வில் பெருமளவானோர் கலந்துகொண்டு மாமனிதர் சச்சிதானந்தத்தை நினைவு கூர்ந்தனர். (த-14)

## வவுனியா, மன்னார் டிப்போக்களை நவீன மயப்படுத்த நடவடிக்கை

இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலையின் கீழ் இயங்கும் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் உள்ள பஸ் டிப்போக்களை நவீன மயப்படுத்தப்பட்ட டிப்போக்களாக மாற்றுவதற்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கை போக்குவரத்துச், சபையின் மறு சீரமைப்புத் திட்டத்தின் கீழ் வடக்கில் இந்த இரண்டு டிப்போக்களும் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

வவுனியா மற்றும் மன்னார் டிப்போக்களில் பல ஆண்டுகளுக்கு முன்னர் தருவிக்கப்பட்ட பஸ்களே சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன என்றும் -

இவற்றினை மாற்றி இரண்டு டிப்போக்களுக்கும் புதிய பஸ்களைத் தருவித்து நவீன மயப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும் என்றும் - இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலை அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (த-7)

## நியாப் II திட்டத்துக்கு முல்லைத்தீவில் 25 மையக் கிராமங்கள் தெரிவு

ஒட்டுசுட்டான்,பெப்.3

நியாப் II திட்டத்திற்கென முல்லைத்தீவு மாவட்டத்தில் 25 மையக் கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பொதுமண்டபம், கிணறுகள் போன்றவை இக் கிராமங்கள் தோறும் அமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் வீதி திருத்தம், ஜீவனோபாயத் திட்டம், கடன்திட்டம் போன்ற திட்டப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

அம்பாள்புரம், தேவிபுரம், இளங்கோபுரம், வன்னிவிளாங்குளம், நட்டாங்கண்டல், அனிச்சையன்குளம், ஆலங்குளம், உடையார்குளம், இரணைப்பாலை, மந்துவில், ஆறுமுகத்தான்குளம், முள்ளியவளை கிழக்கு, புதறிகுடாமுறிப்பு, தண்டுவான், பழம்பாசி, பெரியஇத்திமடு, கரிப்பட்ட முறிப்பு, நீதிபுரம், கற்குவாரி, திருமுறிகண்டி, பணிக்கன்குளம், சிவநகர், சின்னச்சாளம்பன் ஆகிய கிராமங்களில் வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

தேவிபுரம், அம்பாள்புரம் ஆகிய கிராமங்களின் பொதுமண்டபங்கள் அண்மையில் நிறுவனத்திட்டப் பணிப்பாளர் எந்திரி சு.சிவகுமாரால் திறந்து வைக்கப்பட்டன. (த-341-202)

## புளியங்குளத்தின் அணையில் உடைவு; அதனை அடைத்துத் தருமாறு கோரிக்கை

ஒட்டுசுட்டான்,பெப்.3

சமீபத்தில் பெய்த பெரும் மழையினால் ஒட்டுசுட்டான், புளியங்குளம் உடைப்பெடுத்துப்பாய்ந்தது எனினும், அந்த உடைப்பு இதுவரை அடைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

முத்தையன் கட்டுக்குளத்து நீரைப் புளியங்குளத்தில் தேக்கிவைத்து அங்கிருந்து கருவேலன் கண்டல், மானுருவி உட்பட பல பகுதிகளுக்கு நீர் வழங்கப்பட்டுவந்தது.

இந்த நிலையில் குளக்கட்டில் ஏற்பட்ட உடைவு காரணமாக இந்த வருடம் சிறுபோகச் செய்கைக்கு நீரை விநியோகிக்க முடியாத நிலை இருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர் இதில் உரிய அக்கறை கொண்டு உடனடியாகக் குளக்கட்டு உடைப்பை அடைத்து சரிசெய்ய வேண்டும் என்று விவசாயிகள் கேட்கின்றனர். (த-341)

## ஒட்டுசுட்டானில் சிறிய குளங்கள் பற்றைகள் மண்டிய நிலையில்!


ஒட்டுசுட்டான்,பெப்.3

ஒட்டுசுட்டான் கமநல சேவைகள் திணைக்களத்திற்குட்பட்ட சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் குளக்கட்டுகள் மிகவும் சேதமுற்ற நிலையில் காணப்படுகின்றன. குளக்கட்டின் மேலுள்ள காடுகளைத் துப்புரவு செய்யாமையே இதற்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப் படுகின்றது.

கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

மேற்படி குளங்களின் புனரமைப்புக்கென அரசினால் எந்தவித நிதி ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்படாததால் குளங்களின் புனரமைப்புப் பணிகள் எவையும் மேற்கொள்ளப்படுவதில்லை.

இதனால், குளக்கட்டுக்களின் மேல் பற்றைகள் வளர்ந்துள்ளதுடன் குளக்கட்டுக்களில் உடைவுகளும் ஏற்பட்டு வருகின்றன. (த-341-202)





கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேசத்தில் கருவண்டின் (காண்டாமிருக வண்டு) தாக்கத்தினால் தென்னைகள் அழிவடைந்து வருகின்றன.

இந்த நோய்த் தாக்கத்திற்கு உள்ளான தென்னைகளைப் படங்களில் காணலாம். *(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)*

## வர்த்தகர் சங்க புதிய நிர்வாகிகள்

வட்டக்கச்சி,பெப்.3

வட்டக்கச்சி பிரதேச வர்த்தகர் சங்க ஆண்டுப் பொதுக் கூட்டம் கடந்த 17ஆம் திகதி நடைபெற்றது. வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு வர்த்தகர் சங்கத் தலைவர் சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

அகவணக்கத்துடன் ஆரம்பித்த இக்கூட்டத்தில் வட்டக்கச்சி பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் ச.திருமாறன் சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து புதிய நிர்வாகத் தெரிவு இடம் பெற்றது. தலைவராக சுரேஸ், செயலாளராக அப்பன், உபதலைவராக சந்திரன், உபசெயலாளராக கோகுலன், பொருளாளராக கமலநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

புதிய நிர்வாகத்தினர் இந்த ஆண்டுக்கான வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடினர். (த-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினிக் கற்கைநெறிகள்

ஆரம்பமாகிறது..!! 2006



GIT Cla ses
Dip in MS Office
Kids Courses

- தாய் மொழியில் விரிவுரைகள்...
- தனிப்பட்ட கவனிப்புடனான கற்பித்தல்..
- சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழ்...

இன்னும் பல..

உங்களுடன் எப்பொழுதும் உங்களுக்காக நாங்கள்...

A2Z COM.COM

IIS உடன் இணைக்கப்பட்டது

பருத்தித்துறை வீதி கொடிகாமம்.

ஐஐஎஸ் கற்கை நெறிகள் கொடிகாமத்திலும்....


## ஆசிரிய பணிக்கான வேண்டுகை

பின்வரும் பாடங்களில் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு சனி, ஞாயிறு நாள்களில் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

* கற்பிக்க வேண்டிய பாடங்கள்
01. தமிழ் 02. புவியியல் 03. வரலாறு 04. கணிதம் 05. உயிரியல் 06. வேதியியல் (இரசாயனவியல்) 07. பூதியல் ( பௌதிகவியல்) 08. கணக்கியல் 09. வணிகவியல் 10. பொருளியல்

* கற்பிக்க வேண்டிய இடங்கள்
01. கிளிநொச்சி 02. புதுக்குடியிருப்பு 03. மல்லாவி 04. பூநகரி

* வேண்டுகை முடிவு நாள் : 10.02.2006
* வேண்டுகை அனுப்ப வேண்டிய முகவரி :
பொறுப்பாளர்,
மனித வளமேம்பாட்டுப் பகுதி,நிதித்துறை,
நாகதம்பிரான் வீதி,ஆனந்தபுரம், கிளிநொச்சி.
* நேர்காணல் நடைபெறும் நாள் : 18.02.2006 காலை 9 மணி
* நேர்காணல் நடைபெறும் இடம் :
மனிதவள மேம்பாட்டுப் பகுதி, நிதித்துறை,
நாகதம்பிரான் வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.
* நேர் காணலுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், அடையாள அட்டை ஆகியவற்றையும் வேறு தகைமைச் சான்றிதழ்கள் இருப்பின் அவற்றையும், எல்லாவற்றினதும் நிழற்படிகளையும் கொண்டு வருக.
* சம்பளம் : நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (சி-47591) (11-18-17)

ஆளுகை
மனிதவள மேம்பாட்டுப் பகுதி ,நிதித்துறை.

## அழைப்புக் கட்டளை

**குடியியல் நடவடிக்கைச் சட்டக் கோவை இல. 16 பிரிவு 55 (1)**

**யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில்......**

வழ./இல.
காணி 582

சங்கரப்பிள்ளை கயிலாசபிள்ளை,
இல.372, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
- வழக்காளி

எதிராக,
நடராசா கைம்பெண் கனகேஸ்வரி,
இல. 06, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
- எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி மேற்படி இலக்கமுடைய காணி வழக்கை இந்நீதிமன்றத்தில் உமக்கு எதிராகத் தொடுத்துள்ளமையால் இவ்வழக்கிற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2006ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இருபதாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு, சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரர் இல்லாமலேயே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும்படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீவிர் தோன்றாவிடில் சட்ட முறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

வரைவு
பொன்.பூலோகசிங்கம்
வழக்காளி
சட்டத்தரணி

நீதிமன்றக் கட்டளைப்படி
து.சிறீமோகன்
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:
**விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காகப் பகிரங்க நீதிமன்றத்தில் இவ் வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெற விரும்பினால் பதிவுசெய்யப்பட்ட முகவரியொன்றைப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும் 80ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.**

**2006ஆம் ஆண்டு தை மாதம் 30ஆம் நாளாகிய இன்று**

கையொப்பம்
து.சிறீமோகன்
பதிவாளர்.

(சி/47651) (24.26.11.15)

## சமய சந்நிதிகளில்...

சாவகச்சேரி,பெப்.3

மீசாலை மேற்கு அருள்மிகு ஸ்ரீ நரசிங்க வைரவர் காளி அம்பாள் தேவஸ்தான புனராவர்த்தனப் பிரதிஸ்டா மகா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை 7.54 மணி தொடக்கம் 9.06 மணிவரை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகம் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ க.வீரபத்திரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் ஆசியுரையை செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் நிகழ்த்துவார். (202-31)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.3

காரைநகர் பயிரிக்கூடல் சுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 9ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் 11ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (204)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,பெப்.3

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் பெரியாழ்வார் ஆச்சிரமம் நடத்தும் வாராந்த நிகழ்வில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை சொல்வேந்தன் பொன்.சுகந்தனின் சொற்பொழிவு இடம்பெறும். இவர் 'இராமாயணம்' என்னும் பொருளில்சொற்பொழிவு ஆற்றுவார். (204)

## ப.நோ.கூ. சங்கத்தின் மொத்த விற்பனை நிலையம்

அரியாலை,பெப்.3

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மொத்த விற்பனை நிலையம் ஒன்றைக் கடந்த புதன்கிழமை திறந்து வைத்துள்ளது.

சங்கத்தின் பொது முகாமையாளர் கே.கவிந்திரதாஸ் இதனைத் தெரிவித்தார்.

கே.கே.எஸ்.வீதியில் அமைந்திருக்கும் சங்கத்தின் தலைமை அலுவலகக் கட்டடத்தின் கீழ் மாடியில் உள்ள வர்த்தக நிலையத் தொகுதியில் இந்த மொத்த விற்பனை நிலையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது. சங்கத்தின் உபதலைவர் எஸ்.ரி.கனநாதன் இதனைத் திறந்து வைத்தார்.

மா, சீனி, வெள்ளைப்பச்சை அரிசி, குத்தரிசி, சம்பா அரிசி, உப்பு மற்றும் இதர உணவுப் பொருள்களை இந்த விற்பனை நிலையத்தில் மொத்தமாகவும் நியாய விலையிலும் பெற்றுக் கொள்ளமுடியும் என்று சங்கத்தின் வர்த்தக முகாமையாளர் இ.முருகானந்தன் கூறினார். (எ-17)

## குருபூசைத் தினமும் திருவாசக விழாவும்

கொழும்பு,பெப்.3

திருக்கேதீச்சரம் திருவாசகம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகளது 18 ஆவது குரு பூசையும் திருவாசக விழாவும் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் கோயிலில் இருந்து ஸ்ரீ சபாரத்தினம் சுவாமி திருவுருவப்படம் ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு எடுத்து வரப்பட்டு திருப்பணித்தவமணி சி.தியாகராசா தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனானந்தா அருளுரை நிகழ்த்துவார். தொடர்ந்து சிறப்புரைகள் இடம்பெறும். (204)


### வேலையாள்கள் தேவை

சந்நிதி முருகன் வேக்சொப் அன்சேவிஸ் நிலையத்திற்கு சேவிஸ் வேலை செய்வதற்கு அனுபவம் உள்ளவர்களும் பழகவிரும்புபவர்களும் தேவை.

* அனுபவம் உள்ள கணனி இயக்குநர் தேவை (பெண்).

தொடர்பு:
இல. 241, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(வீரமாகாளி அம்மன்கோயில் அருகில்)

(46243)

### VNC

தரமான முறையில் கொங்கிறீற் கற்கள், தூண்கள் 100 அடி நீளம், 40 அடி அகலம் கொண்ட தொட்டிகளில் அறுக்கப்பட்டு பின்னர் நீரில் ஊறவிட்டு விற்பனை செய்யப்படுகின்றன. 1அடி நீளம் 4'' அகலக் கல்லின் விலை 26/= மட்டும். நேரடியாகப் பார்வையிட்டு முற்கூட்டியே பதிவு செய்து பெற்றுச் செல்லவும்.

VNC

[illegible] அருகில்
அளவெட்டி மத்தி, அளவெட்டி

(46180) (21.11.15)


## அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.3

சிறுவர்பாதுகாப்பு நிதியத்தினர் கோண்டாவில் பகுதியில் அமைந்துள்ள நன்னடத்தைப் பாடசாலைக்கு 20 புத்தகப் பைகள் மற்றும் விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (202-190)


# SAAMSTECH

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

### 1. ஆங்கிலம்

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர்கள், அலுவலர்கள், இளைஞர்கள் மற்றும் வீட்டுப்பெண்களுக்கானது. காலம் : 3 மாதங்கள்
கிழமை மற்றும் வார இறுதி காலை, மாலை வகுப்புக்கள்.

### 2. சிங்களம்

அன்றாட வசனங்களைக்கொண்டு முழுமையாக கதைப்பதற்கான பாடநெறி. காலம் : 2 மாதங்கள்

### 3. Web Technology

இணையதள வடிவமைப்புக்கான பயிற்சிநெறி

**கட்டணம் ரூபா 3000/-**

**சிறப்புச்சலுகை**

இன்று பதிவுசெய்வோருக்கு 4000/- இற்கான ஆங்கில, சிங்கள, புத்தகங்கள் இலவசம்

# SAAMSTECH

233/4, Kasthuriar Road, Jaffna

(46268)


## 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 - 07 - 1955



உதிர்வு 24 - 01 - 1988

**திருமதி காயத்திரி ஆனந்தரமணி தர்மசோதி**

(விஞ்ஞான ஆசிரியை)

திதி:ஷஷ்டி 03.02.2006

காலஞ்சென்றவர்களான
திரு.சபாஆனந்தர்
திருமதி அன்னம்மா ஆனந்தரின் கனிஷ்ட புத்திரி.

உங்கள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில்
உங்கள் ஆசீர்வாதம் வேண்டிநிற்கின்றோம்.

ஸ்ரீ சாலினி
கே.கே.எஸ். வீதி,
இணுவில். (46263)(18.26.11.15)

-குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவு

பிறப்பு 13 - 12 - 1935



இறப்பு 15 - 01 - 2005

**அமரர் ஐயாத்துரை இராஜரட்ணம்**

திதி: ஷஷ்டி

*ஆண்டொன்று ஆனாலும்*
*ஆறவில்லை எம் துயரம்*
*உங்கள் நினைவுகள் என்றும்*
*மாறாது மறையாது!*

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இல.123, A.V.ROAD,
அரியாலை,
யாழ்ப்பாணம். (46289)(32.26.11.15)

-குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுக்கடலில் படகு கவிழ்ந்து இந்தோனேஷியாவில் 30 பேர் பலி!

ஜகார்த்தா,பெப்.3

இந்தோனேஷியக் கிழக்கு கடற்பிராந்தியத்தில் பயணிகள் படகு ஒன்று கடலில் கவிழ்ந்ததில் 30இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

இதுவரை மீட்புப் பணியாளர்களினால் 113 பேரை மீட்க முடிந்ததாகவும் படகில் பயணம் செய்தவர்களில் 13 பேரின் நிலை என்ன ஆனது என்று தெரியவில்லை என்றும் மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தோனேஷியாவின் திமோர் தீவில் உள்ள குபாங் எனும் துறையில் இருந்து புறப்பட்ட இந்தப் படகு ஜகார்த்தாவில் இருந்து 2,000 கிலோமீற்றர் தொலைவில் உள்ள ரோட் தீவுக்குப் பயணம் மேற்கொண்டபோதே ஆழ்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

படகில் பயணம் செய்தவர்களது உறவினர்கள் தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன ஆனது என்பதை அறிய திமோர்த் தீவு படகுத்துறையான குபாங் துறையில் வரிசையில் பரிதவித்து நின்றனர் எனச் செய்திகள் தெரிவித்தன.

காணாமற்போயுள்ளவர்களை மீட்கும் நடவடிக்கை நேற்று சூரிய வெளிச்சம் வந்தவுடனேயே மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

படகில் பயணம் செய்தவர்கள் எத்தனை பேர் என்பது சரியாகத் தெரியவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

பயணிகளும் கப்பல் ஊழியர்களுமாக 102 பேர்வரையானோரே படகு புறப்படும்போது தமது பதிவுகளை மேற்கொண்டிருந்தனர்.

திமோர்தீவின் மேற்குக்கரையில் உள்ள குபாங் துறைக்கும் றோட் தீவுகளுக்குமிடையில் 4 மணிநேர கடற்பிரயாணம் செய்யவேண்டும். அதில் இரண்டு மணிநேரம் கழிந்த நிலையில் படகின் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டது.

படகு மீண்டும் குபாங் துறைக்குத் திரும்ப எத்தனித்தபோதும் இயந்திரம் முற்றாகச் செயலிழந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தோனேஷியத் தீவுகளுக்கிடையில் பொதுப் போக்குவரத்து மார்க்கமாகப் படகுச் சேவை விளங்குகின்றது. எனினும் படகுகள் விபத்துக்குள்ளாகி உயிரிழப்புகள் இடம்பெறுவது அங்கு அதிகரித்து வருகின்றது படகுகளின் பராமரிப்பில் குறைபாடுகள் மற்றும் அதிகப்படியான பயணிகளை ஏற்றிச்செல்லல் என்பவற்றால் விபத்துச் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்றன என அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்தப் படகு விபத்தின்போது படகில் கார் மற்றும் பார ஊர்தி வாகனங்கள் சிலவும் ஏற்றிக்கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

உலக அரங்கில்

# எகிப்தில் நடந்த பஸ் விபத்தில் சுற்றுலாப் பயணிகள் 32பேர் பலி!

கெய்ரோ,பெப்.3

எகிப்தின் தென்பகுதி நகர் ஒன்றில் இடம்பெற்ற இரு வேறு பஸ் விபத்துகளில் 32 பேர் பலியாகியுள்ளனர் என்று செய்தி நிறுவனம் ஒன்றின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 54 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொங்கொங் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற பஸ்ஸே முதலாவதாக விபத்தில் சிக்கியது. 43 சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற இந்த பஸ் செங்கடலிற்கு அருகில் சென்றுகொண்டிருக்கையில் வீதி வளைவு ஒன்றை கடக்கும்போது விபத்துக்குள்ளானது. இதில் 14 பேர் பலியாகினர்; 30 பேர் காயமடைந்தனர்.

இரண்டாவது விபத்து 18 எகிப்தியர்களை ஏற்றிச்சென்ற பஸ் லொறி ஒன்றுடன் ஒன்று மோதியதால் ஏற்பட்டது. இதன்போது 18 எகிப் தியர்கள் கொல்லப்பட்டனர். 24 பேர் காயமடைந்தனர்.

முதலாவது விபத்துச் சம்பவம் சபாகா - குர்ஹடா வீதியில் உள்ளூர் நேரப்படி காலை 7 மணிக்கு இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவர்கள் தொடர்பாக எகிப்திய அதிகாரிகளிடம் இருந்து தமக்கு மேலதிக விவரங்கள் எவையும் கிடைக்கவில்லை என சுற்றுலா நிறுவன தலைவர் தெரிவித்துள்ளார்.

உலகில் அதிகப்படியான விபத்துச் சம்பவங்கள் இடம்பெறும் ஒரு நாடாக எகிப்து விளங்குகின்றது. ஒவ்வோர் ஆண்டும் எகிப்து முழுவதும் 6,000 பேர் வரையானோர் வீதி விபத்துகளால் உயிரிழக்கின்றனர் என அந்த நாட்டு புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. வீதி ஒழுங்குகளை பெரும்பாலான சாரதிகள் கடைப்பிடிக்காமையே இதற்குக் காரணம் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (ம)



சிங்கப்பூர் அதிபர் மாளிகைக்கு வந்த ஜனாதிபதி அப்துல்கலாமை அந்நாட்டு அதிபர் எஸ்.ஆர்.நாதன் வரவேற்கிறார்.

# வெடிவிபத்தில் சீனாவில் 23 பேர் பலி!

பீஜிங்,பெப்.3

சீனாவில் சுரங்க வெடிவிபத்தில் சிக்கி 23 பணியாளர்கள் பலியாகியுள்ளனர்; 50 பணியாளர்கள் விஷவாயு தாக்கி ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

சீனாவின் வடக்குப் புறத்தில் உள்ள ஷாங்ஷி மாகாணத்தில் அரசிற்குச் சொந்தமான சுரங்கம் ஒன்றிலேயே நேற்றுமுன்தினம் மாலை இந்த விபத்துச் சம்பவித்துள்ளது.

வெடிவிபத்து இடம்பெற்ற வேளை 700 தொழிலாளர்கள் சுரங்கத்தில் பணிபுரிந்தனர் எனவும் அதில் 53 பேர் கார்பன் நச்சுவாயு தாக்கத்திற்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் செய்தி ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அரசினால் இயக்கப்படும் ஜின்ஷேங் எனப்படும் இந்தச் சுரங்கத்தின் அதிகாரியான பாக்ஜொங் மிங் 23 பேர் பலியாகினர் என்பதை உறுதிப்படுத்தினார்.

சுரங்கத்தில் சிக்கியவர்களை மீட்கும் நடவடிக்கைகளும் தேடுதல்களும் நேற்றுக் காலை நிறைவடைந்தன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவின் மொத்த சக்தித் தேவையில் 70 வீதம் நிலக்கரி மூலம் பூர்த்தி செய்யப்படுவதால் அதிகளவான தொழிலாளர்கள் நிலக்கரி அகழ்வுப் பணிகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். கடந்த வாரம் அனுஷ்டிக்கப்பட்ட சீனாவின் லூனார் புதுவருடத்தை முன்னிட்டு இந்தத் தொழிலாளர்களிற்கு 4 நாள் விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. விடுமுறையின் பின் நேற்றுமுன்தினம் தமது பணிகளை அவர்கள் ஆரம்பித்தபோதே இந்த அனர்த்தம் சம்பவித்துள்ளது.

மிக அபாயமான நிலக்கரிச் சுரங்கங்களை தன்னகத்தே கொண்ட நாடு சீனா. இதன் சொந்தக் காரர்களும், அரசும் இந்தத் தொழிலாளர்களின் பாதுகாப்பு விடயங்களில் புறக்கணிப்பு நிலை தொடர்வதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றது. சீன தேசிய பாதுகாப்பு அதிகாரசபை கடந்த மாதம் வெளியிட்ட அதன் அறிக்கையில் 2005ஆம் ஆண்டு சீனா முழுவதும் இடம்பெற்ற நிலக்கரிச் சுரங்க விபத்துகளில் சிக்கி 5ஆயிரத்து 986 பேர் பலியாகியுள்ளனர் எனச் சுட்டிக் காட்டியுள்ளது. (ம)





1681

01.02.2006 ஆம் திகதி புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் . சுப்பர் எண்

03 27 56 68 (16)

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 200929351 இலிருந்து 200945830

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 1,28,63,850/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 1,28,63,850/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 31 | 5,000/- | 1,55,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 441 | 1,000/- | 4,41,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,444 | 500/- | 7,22,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 21,481 | 40/- | 8,59,240/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 20,400 | 20/- | 4,08,000/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,06,074 | 10/- | 30,60,740/- |
| மொத்தம் | | | 76,45,980/- |
| தங்க நகைகள் , தையல் இயந்திரம் , சைக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,49,878 | | 81,45,980/- |

தொடர் இல. 300880020 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கெட்டுக்கள் 2006 பெப்ரவரி 04 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 1,36,81,150/-

| | |
|---|---|
| நுவரெலியா | 200931047-8-67 |
| திருகோணமலை | 200931449-9-15 |
| பொலன்னறுவை | 200931334-7-91 |
| குருநாகல் | 200933297-1-24 |
| கொழும்பு | 200944299-8-89 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி கொழும்பு-03



அக்கை அறுபது காணும்
எமது கலாசாலையின் அதிபரை
வாழ்த்துகின்றோம்



உயர்திரு. கு.சதாசிவமூர்த்தி
B.A.,PG.DE, Dip. in Ag., Spl.Trd., M.Ed.,S.L.E.A.S.

இனப்பற்று மண்பற்று மொழிப் பற்று
என நெடுநாள்
புறப்பட்டுப் பொது வாழ்வில்
புடமிட்ட பேராசான்
களைப்பற்று அர்ப்பணிப்போடு
கடமை செய்யும் ஒரு பிறவி
இளைப்பாறல் எங்கே? நம்
...தில் இருப்பாய் நீ!

- பலாலி ஆசிரிய கலாசாலை சமூகம்.

(C/47677)(22-11-34


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னும் நீங்கள் தாமதிக்கிறீர்களா ???



A/L தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர் கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அநேகமானோர் பிரபல பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறுவதிலும் (Admission) உயர்கல்விக்கான வாய்ப்புக்களைப் பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள [illegible]XCEL UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுக்தருவதோடு உயர்கல்விக்கான வாய்ப்புக்களையும் உறுதிசெய்கின்றது. அதுமட்டுமல்லாது HND தகைமையைப் பெற்றுக் கொண்டவர்கள போட்டி மிகுந்த வேலைவாய்ப்புச் சந்தையில் இலகுவில் தகுதியான வேலைகளைத் தட்டிச் செல்கின்றனர்.

**புதிய பிரிவுகள் ஆரம்பம் : 11.02.2006**



கிருஷாந்தஸ் ஜூட்
சுண்டிக்குளி

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் மாணவனாகிய நான் A/L 2004 கணிதப்பிரிவில் பரீட்சைக்குத் தோற்றிப் பல்கலைக்கழக அனுமதி தவறவிடப்பட்ட நிலையில் எனது வாழ்க்கைக்கு இந்த IIS நிறுவனம் நம்பிக்கையான ஒரு வழியைக்காட்டியது. தகவல் தொழில்நுட்பக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் மாணவனாக இருப்பதையிட்டு பெருமையடைகிறேன். Edexcel International UK நிறுவனத்தின் HND கற்கைநெறியைப் பயின்றுவரும் நான் இக் கற்கைநெறியின் அங்கீகாரம் தொடர்பாக திருப்தியடைந்துள்ளேன். இவ்வாண்டில் பட்டம் பெற்று வெளியேறிய மாணவர்களுக்கு வெளிநாட்டு உயர்கல்வி, வேலை வாய்ப்பு எனப் பல்வேறு சந்தர்ப்பங்கள் தேடி வருவதையிட்டு எனக்கும் ஓர் ஒளிமயமான எதிர்காலம் உண்டென நானும் எனது பெற்றோரும் நம்பிக்கையுடன் உள்ளோம்.

**BTEC HND**
World Class Qualifications
Delivered Locally....... Recognised Globally

B.Sc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

↑

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1 ½ years )

↑

GCE A/L
with 2 Subjects

edexcel
INTERNATIONAL
Approved Training Centre


## IIS CITY CAMPUS

# 181, Navalar Road, Jaffna.
TP No. : 021 222 8060 / 021 222 2201

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம்
30 * 04 * 1952



மறைவு
04 * 01 * 2006

### அமரர் கந்தையா தர்மலிங்கம்

பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
எங்களுக்கு நல்வழிகாட்டியவரே....!
பெரும் துயர் வந்து முப்பத்தொரு நாள்கள்
கழிந்தனவே!
ஏணியாய் இருந்து எம்மை ஏற்றத்தில்
ஏற்றிவிட்டு எங்கே சென்றீர்கள்?
எங்கள் ஆருயிர் தலைவரே!
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

மயிலணி வடக்கு,
சுன்னாகம். (46297)(42-17-15)

மனைவி,
பிள்ளைகள்.

---

**The Royal College of Jaffna**

சுலபமாக ஆங்கிலத்தில் இலக்கணம் கதைக்க, பயில By. விக்னேஸ்வரன் ஆச்சாரி. கட்டணம் மாதம் தனியாக 1000/=, சேர்ந்து 200/=
426, (302) K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
பிளாக்வீதி, சங்கானை. (46309)(42.15.17)

### வாராந்த நிகழ்வு

வடமராட்சி, பெப்.3

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இன்னிசைக் கச்சேரி நடைபெறும்.

தம்பு சற்குணராசா தலைமையில் நடைபெறும் இன்னிசைக்கச்சேரியில் செல்விகள் மனோகரி, எஸ். சாருமதி, எஸ்.ஜெயகலா ஆகியோர் பக்கவாத்தியங்கள் சகிதம் பாடுவார்கள்.

(எ- 173)

### ஆடுகள் திருட்டு

யாழ்ப்பாணம்,பெப்.3

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் பகுதியில் உள்ள வளவு ஒன்றினுள் மேய்ச்சலுக்காக கட்டப்பட்டிருந்த இரண்டு ஆடுகள் திருடிச்செல்லப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் நண்பகல் மேய்ச்சலுக்காக இரண்டு ஆடுகள் கட்டப்பட்டிருந்தன என்றும் - சனநடமாட்டம் இல்லாதநேரம்பார்த்து ஓட்டோ ஒன்றில் வந்தவர்கள் ஆடுகளை ஓட்டோவில் ஏற்றிக் கொண்டு சென்றுவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேய்ச்சலுக்காக கட்டப்பட்டிருந்த ஆடுகளை வீட்டிற்கு கொண்டுவரச் சென்ற உரிமையாள் ஆடுகளைக் காணாததையடுத்து அப் பகுதியில் தேடினார் என்றும் -

இதன்போது ஆடு கள் இரண்டும் ஒட்டோ ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டதாக அப்பகுதியில் நின்று அவதானித்த ஒருவர் கூறினார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(த-7)

### முன்பள்ளிகளின் வளவிவரம் சேகரிப்பு

வடமராட்சி, பெப்.3

பருத்தித்துறை பிரதேச சபைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகள் என்பனவற்றின் வள விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகளின் தேவைகள் பற்றாக்குறைகள், வசதியீனங்கள் போன்ற தகவல்களையும் விவரத்தில் உள்ளடக்குமாறு பருத்தித்துறை பிர[illegible] கேட்டுள்ளார்.

(எ-173)

---

**பகல் பராமரிப்பு**

வேலைக்குச் செல்லும் பெற்றோரின் பிள்ளைகளைப் பராமரிப்பதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு: த.சரிதா,
77, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம்.
(46313)(26-15-17-42)

---

**MCS** 324, Palaly Road, Jaffna. (Near "Alady Junction")

## சான்றிதழ் வழங்கல்

எமது நிறுவனத்தில் கற்கை நெறியைப் பூர்த்தி செய்து சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளாத மாணவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

*****Supported by UNDP/JRRP*****

---

## நீங்காத நினைவில் 31ஆம் நாள்

மலர்வு
14 - 02 - 1927



உதிர்வு
04 - 01 - 2006

### திருமதி கனகசபை சரஸ்வதி

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

17/5, சாஸ்திரியார் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம் (46312)(32-15-17-42)

குடும்பத்தினர்
சோ.இராசா (இ.மி.ச)

---

## பதவி வெற்றிடங்கள்

**சிறைச்சாலைத் திணைக்களம் - யாழ்ப்பாணம்**

யாழ்.சிறைச்சாலைத் திணைக்களத்திற்கு சிறைச்சாலை பாதுகாவலர் (Prison Guard)(ஆண், பெண் இருபாலரிடமும்) அத்துடன், ஆண் சிற்றூழியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு கீழ்க்காணும்தகைமை உடையவர்கள் விண்ணப்பம் செய்யலாம். விண்ணப்ப முடிவு திகதி 15.02.2006இற்கு முன்பதாக பதிவுத் தபாலில் அரச அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம்.

**தகைமைகள்**

**1.சிறைச்சாலை பாதுகாவலர் (ஆண்களும் , பெண்களும்)**

**வயது:** 18 - 45 வயதிற்கு உட்பட்டவர்கள்.

**கல்வித்தகைமை:** க.பொ.த. சாதாரண பரீட்சையில் 6 பாடங் களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அதில் இரு பாடங்களில் திறமைச் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.அத்துடன், கணிதம், தமிழ் ஆகிய இரு பாடங்களிலும் கட்டாயச் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (ஒரு அமர்வில் குறைந்தது 5 பாடங்களாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

**உயரம்:** ஆண்களுக்கு குறைந்தளவு 5' 4''
பெண்களுக்கு: குறைந்தது 5' 2''

**மார்பு அளவு:** ஆண்களுக்கு குறைந்தது 32''

குறிப்பு : தகைமைகளுக்கான அத்தாட்சிப் பத்திரங்களின் நிழற் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பவும்.

**2.சிற்றூழியர்களுக்கான தகைமைகள்:**

வயது: 18 - 45 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

கல்வித்தகைமை: 8 ஆம் தரம் அல்லது 9 ஆம் வருடம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு: கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் சிறைச்சாலை பதவி வெற்றிடத்துக்கான விண்ணப்பம் எனக்குறிப்பிடப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்ப படிவத்தினை யாழ்.மாவட்டச் செயலக/யாழ்.சிறைச்சாலைத் திணைக்கள விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

அத்தியட்சகர்,சிறைச்சாலை ,
யாழ்ப்பாணம்.

01.02.2006 (ச/47665)(18-15-17-42)

---

## 100 ஆவது அகவையும் 92ஆம் நாள் நினைவஞ்சலியும்



அமரர்
### பொன்னையா சுப்பிரமணியம்

மலர்வு
03-02-1906

உதிர்வு
05-11-2005

மனிதருள் மாணிக்கமாய் - அன்பின் சிகரமாய் - பண்பின் பிறப் பிடமாய் - பாசத்தின் திருவுருவாய் - இன் சொல்லின் இருப்பிடமாய் கடமையில் கண்ணியமாய் - உயிரினில் உறைந்து விட்ட உங்களை - எமது இதயத்தின் ஒவ்வொரு துடிப்பிலும் உணர்கின்றோம்.

உங்கள் ஆத்மசாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

8 ஆம் கட்டை,
துர்க்காபுரம், மல்லாகம். (46303)(18-15-17-42)

இ.விஜயலக்சுமி
(மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியைத் தேடுவதற்கு ஆன்மீகமே ஊடகம்

மனம் நெருக்குவாரங்களில் இருந்து தப்பியோடி அமைதியின் அமானுஷ்யக் குகைக்குள் பதுங்குவதற்கே ''ஆசை பற்றி'' நிற்கிறது. எல்லா ஆர்ப்பாட்டங்களையும் விலக்கிய படி அமைதிக்கான கணங்களில் ஆரோகணித்தலே மனிதத் திருப்தியின் தலையாயதாகிறது.

*''அமைதி என்ப துமரணத் தறுவாயோ*
*வந்தமர்ந்த பறவையினால் அசையும் கிளையோ?*
*அமைதி என்பது வாழ்வின் தலைவாயிலோ*
*எழுந்து சென்ற பறவையினால் அசையும் கிளையோ''*

என்ற தேவதேவனின் கவிதை மனதில் பல பிரதிகளை உண்டுபண்ணுகிறது. அமைதியைத் தேடுவதற்கு ஆன்மீகம் ஊடகமாகிறது. தன்தளத்தில் ஆன்மீகம் என்பது ஓர் இருத்தல் நிகழ்தல் மட்டுமே. அதற்கடுத்த தளத்தில் அது ஒரு தேடல் ஆகிறது. இதுவே வாழ்வின் அடிப்படை ஊக்கம் ஆகிறது. ஆன்மீகம் என்பது ஆத்மீகம் என்ற சமஸ்கிருத சொல்லில் இருந்து வந்தது. ''ஆத்மா சார்ந்த'' என்பது இதன் எளியபொருள் ஆகிறது. இந்த ஆத்மாவைக் குளிர்வித்து அமைதியின் சிறகுகளுள் வசிப்பதற்கும் விரிவதற்கும் தியானம் ஊன்றுகோலாகிறது. இதனால்தான் -

*''வாக்கிற் கெடாததும் ஞானவொளியிற் கண்டு இன்புறல் கூடியதும் மலரகிதமானதும் அறிவுருவானதும் ஆதியந்தமுமில்லாததான பரப்பிரமமே நீ ஊன்றித் தியானஞ்செய்''* என்று விவேகசூடாமணி சொல்லி நிற்பது கவனத்துக்குரியது. தியானம் மூவகையாக விளங்குகிறது.

உருவத்தியானம், அருவத்தியானம், சொரூபத்தியானம் என்று ஒன்றிலிருந்து ஒன்றுபடி மலர்ச்சி காணும் நுண்திறன் உச்சபட்ச அமைதியின் கதவுள் நுழைய அனுமதிக்கிறது. இவ்விடத்தில் ஜெ.கிருஷ்ணமூர்த்தி கூறிய புகழ்பெற்ற வாக்கியமான ''தியானம் என்பது வாழ்க்கையில் இருந்து தப்புதல் அல்ல'' என்பது கொண்டாடப்படவேண்டிய ஒன்றாகும்.

ஞானக்கதிர்

ஏனெனில் வாழ்க்கையின் உள், வெளி முகங்களைச் சரியாகப் புரிந்துகொள்வதற்கு தியானம் ஆயுதமாகிறது. இன்னுமொரு முக்கிய நோக்கமாய் சீவசாட்சியை ஐயமற அறிந்து சிவசொரூபமாய் ஐக்கியமாதல் விளங்குகிறது. வாழ்வு நிலைப்பதற்கான சாத்தியங்களில் உபாயம் அறிதலே தேடலின் சாலையாகிறது. இதனாலேயே திருமூலர்

*'' உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே*
*உடம்மை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்''*

என்று உபாயமறிந்து இறும்பூதெய்துகிறார். வாழ்வின் நோக்கங்களை அறியாமல் வந்தோம், இருந்தோம், உண்டோம், போனோம் என்று இருப்பது அலட்சிய நிலையின் தன்மை. ஆனால், அறிதலுக்கும் புரிதலுக்கும் தேடலுக்கும் எல்லாவற்றையும் கடத்தலுக்கும் ஆக்கத்துக்கும் ஊக்கத்துக்கும் ஒரு பக்குவநிலை அவசியமாகிறது. இந்தப் பக்குவத்தை ஞான நிலையின் ஆரம்பப் புள்ளியில் நிற்பதை தியானம் தீர்மானிக்க வைக்கிறது. இதற்கு ஒவ்வொரு நாளும் சிறுநேரமாவது தியானத்தில் நாம் மூழ்குவது உள்வெளிகளை ஊடுருவுதலுக்கும் புதிய அறிதல் புலங்களை காணவும் விசாலிக்கவும் உதவுகிறது.


இதனாலேயே தாயுமானவரின் பாடலொன்று தியானத்தின் அவசியத்தையும் அதன் ஊடாக இறைவனை அடையும் பரிபூரணத்தையும் அதனைத் தவறவிடுவதில் உள்ள துயரத்தையும் தெரிவிக்கிறது.

*''யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பதும்*
*உறங்குவதும் மாக முடியும்*
*உள்ளதே போது நான் நானெக் குளறியே*
*ஒன்றை விட்டொன்று பற்றிப்*
*பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற*
*பரிசுத்த நிலையை அருள்வாய்*
*பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற*
*பரிபூரானந்தமே ''*


என வாழ்க்கைக்கான அமைதியைத் தேடும் உபாயம் ஆன்மீகத்தில் அதன் கிளைப் பாதைகளில் விரிந்து கிடக்கிறது.

- த.அஜந்தகுமார்.

# தெய்வீக ஸ்தலங்களில்



காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்துக்கென புதிதாக வடிவமைக்கப்பட்ட சித்திரத் தேரின் வெள்ளோட்ட விழா அண்மையில் நடைபெற்றது. அதன்போது எடுக்கப்பட்ட படம் இது. (எ)



சங்கானை, மாவடி ஞானவைரவர் ஆலய திருவாதிரை உற்சவத்தின் இறுதி நாளன்று சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றத்தினால் அலங்கரிக்கப்பட்ட ஊர்தி வீதி வலம் வந்தவேளை எடுக்கப்பட்ட படம். (எ)



சண்டிலிப்பாய், கல்வளை விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற திருவெம்பாவை பூஜையின்போது மணிவாசகரின் திருவுருவம் தாங்கிய ஊர்தி பவனிவந்தது (த-13)

# குடாநாட்டில் இவ்வருடம் 20 குளங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.3

பத்தாயிரம் குளங்களைப் புனரமைக்கும் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் 20 குளங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

10ஆயிரம் குளங்களைப் புனரமைக்கும் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் வருடந்தோறும் ஆயிரம் குளங்கள் நிர்மாணிக்கப்பட்டும் புனரமைப்புச் செய்யப்பட்டும் வருகின்றன.

இந்த வகையில் யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் 20 குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன. குளங்களைப் புனரமைப்புச் செய்ய விரும்பும் பொதுமக்கள் தமது பகுதியில் உள்ள கமநல சேவை நிலையங்களுடன் தொடர்புகொண்டு தமது கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11-14)

# நகரில் உள்ள உப மின்சார நிலைய வளவை மலசலகூடமாக்கிய நடைபாதை வியாபாரிகள்

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ்ப்பாணம் மத்திய உப மின்சார நிலைய வளாகம் நடைபாதை வியாபாரிகளின் மலசல கூடமாக மாறியுள்ளது.

யாழ்.பஸ்நிலையப் பகுதிக்கும் ஆஸ்பத்திரிக்கும் இடையிலுள்ள இந்த உப மின் நிலைய வளாகம் நீண்ட காலமாக பற்றைக் காடாக உள்ளமை அனைவரும் அறிந்ததே.

இவ்வாறு அமைந்துள்ள இந்த வளாகத்தின் பற்றைகளை யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் வியாபாரிகள் மலசலகூடமாகப் பயன்படுத்தி வருகின்றனர் எனக் கூறப்பட்டது.

இதனால், இந்தப் பகுதி, அங்கு வேலை செய்பவர்களுக்கோ அல்லது வேறு தேவைகளுக்காகவோ அங்கு செல்கின்றவர்களுக்கு மாத்திரமன்றி அருகில் அமைந்திருக்கும் யாழ்.போதனா வைத்தியசாலைப் பகுதிக்குள்ளும் நடமாடமுடியாத அளவில் துர்நாற்றம் வீசுகின்றது.

கண் கிளினிக், மருந்தகம் ஆகியவற்றிற்குச் செல்லும் நோயாளர்கள் அங்கு பணிபுரியும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரும் இந்தத் துர்நாற்றத்தை நாள்முழுக்க சகிக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். (எ-15)

# அச்சுவேலி ம.வியில் கட்டட வேலை பூர்த்தி வகுப்பறை பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்படவில்லை

அச்சுவேலி, பெப்.3

அச்சுவேலி மத்திய கல்லூரியில் 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் 60 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத்தில் உள்ள 10 வகுப்பறைகள் இதுவரை மாணவர்களின் பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

மேற்படி வகுப்பறைகள் பயன்பாட்டுக்கு வழங்கப்படாததை அடுத்து மாணவர்கள் மிகவும் நெருக்கடியான நிலையில் தமது கல்வியைத் தொடரவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என மாணவர்களின் பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

மேற்படி கல்லூரியில் பழைய கட்டடமாக இருந்த வகுப்பறைகளே இடித்து தரை மட்டமாக்கப்பட்டு புதிய மாடிக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கட்டட வேலைகள் பூர்த்தி அடைந்த நிலையிலும் வகுப்பறைகள் தமது பயன்பாட்டுக்கு ஏன் இதுவரை அனுமதிக்கப்படவில்லை என்று மாணவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (எ-11)

# புங்குடுதீவு நுணுக்கல் பகுதி மக்கள் மலசல கூட வசதிகளின்றிச் சிரமம்

நல்லூர்,பெப்.3

புங்குடுதீவு, 4 ஆம் வட்டாரம், நுணுக்கல் பகுதியில் மலசலகூட வசதிகளின்றி மக்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். 150 குடும்பங்கள் வாழும் இப்பகுதி மக்களுக்கு மலசலகூட வசதிகளை ஏற்படுத்துவதற்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.இதற்கான ஏற்பாடுகளையும் உதவிகளையும் செய்துதருமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸிடம் மக்கள் கேட்டுள்ளனர். (த-111)

# குடாநாட்டில் 9 பிரிவுகளில் சமூக அபிவிருத்தி மையங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ். மாவட்டத்தில் 9 பிரதேச செயலர் பிரிவுகளின் கீழ் சமூக அபிவிருத்தி மையங்கள் அமைக்கப்படவுள்ளன.

சகல வசதிகளையும் கொண்டதாக சமூக அபிவிருத்தி மையம் அமைக்க 'யுனிசெவ்' நிறுவனமும் சிறுவர் பாதுகாப்பு நிதியமும் இணைந்த வகையில் உதவிகளை மேற்கொண்டுள்ளன.

சமூக அபிவிருத்தி மையங்கள் அமைப்பதற்கான இடங்களை சம்பந்தப்பட்ட பிரதேச செயலகமும் 'யுனிசெவ்' நிறுவனமும் இணைந்து பார்வையிட்டு தெரிவுசெய்து வருகின்றன.

ஊர்காவற்றுறை, கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி, காரைநகர், மருதங்கேணி, தெல்லிப்பழை, நல்லூர், சண்டிலிப்பாய் ஆகிய பிரிவுகளில் இந்த மையங்கள் அமைக்கப்படும் . (த-185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IMMEDIATE VACANCY

**solidar** An INGO consortium including NPA, SAH and ASB

Solidar is a consortium of organizations of 12 European countries that supports a broad portfolio of projects. The Solidar network in Srilanka comprises of three international NGOs - Arbeiter Samariter Bund (ASB), Norwegian People's Aid (NPA) and swiss Labour Assistance (SAH).

Under the Village Rehabilitation and Development Physical Infrastructure Program, Solidar will be implementing the construction of more than 1000 permanent houses for Tsunami Affected families in Vadamarachchi East.

## Architect / Architectural Draftsperson

Solidar under the planning and developing programme have several interesting building projects. Our motto is to create awareness about Architecture and Built environment through the projects. Emphasis is given to architectural forms, and function. We are looking for experienced and qualified personnel as all the projects are done by the in - house architectural team.

If you are hard working, flexible, creative, interested in design, art and architecture, then you are encouraged to apply.

You should be able to communicate in English language and should be computer literate.

Successful candidates will be a part of a challenging professional architectural team.

*Qualifications:*

**Architect**
- A degree in architecture with a minimum of 1-3 years experience.
- CAD experience in AutoCad and or ArchiCad.

**Draftsperson**
- A Diploma in Draftsmanship with minimum 2 years of experience as a draftsperson
- Or a NDT or NCT with minimum 2 years of drafting experience
- Or a background in architectural drafting with minimum 3 years experience.
- CAD experience in AutoCad and or ArchiCad.

Interested candidates must send their applications to reach us on or before 10 February 2006 by post or E-mail.

**Solidar is an equal opportunity employer**

Solodar, No.156 Jaffna Road, Paranthan

e-mail: asbadmin@sltnet.lk

Norwegian People's Aid · ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. · Swiss Labour Assistance SAH

---

# B.Sc மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் (வெளிவாரி)

- A/L இல் கணிதம், விஞ்ஞானம் இவற்றில் குறைந்த சித்தி பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- புதிய பிரிவுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.
- இவற்றுக்குரிய பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக ஆரம்பமாகிவிட்டன.
- பதிவு முடிவு திகதி: 15.02.2006

குறிப்பு: இப்பரீட்சைகள் யாவும் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.இணைப்பாளர். (46222) (24.17.15)

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,யாழ்ப்பாணம்.

---

# அச்சுவேலியில் தைப்பூசத் திருநாளில்

(11.02.2006) குதூகல ஆரம்பம்

## இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம்

முற்றிலும் குளிரூட்டப்பட்ட நவீன வசதிகளைக் கொண்டது. 1000 பேர் ஒரே நேரத்தில் கதிரையில் அமர்ந்திருந்து கண்டு களிக்கலாம். 300 பேர் ஒரே நேரத்தில் கதிரை - மேசைகளில் இருந்து உண்டு மகிழலாம். குளிரூட்டப்பட்ட திருமணக் கார், வீடியோ - போட்டோ வசதிகள். விசேடமாக கேரளத்தில் (இந்தியா) இருந்து வரவழைக்கப்பட்ட சமையல்காரர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை விருப்பம்போல உண்டு மகிழக்கூடிய வசதி! தனித்துவமான மேடை ஒழுங்குகள் - இசை நிகழ்வுகள், திருமண வைபவங்கள் - பூப்புனித நீராட்டு விழாக்கள் மற்றும் வைபவங்களுக்கும் முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.

**குதூகல ஆரம்பத்தை முன்னிட்டு - கலைநிகழ்வுப் போட்டிகள்**

இலைமறை காயாக மறைந்திருக்கும் கலைஞர்களை வெளிக்கொணரும் முகமாக 1982ஆம் ஆண்டுக்கு முந்திய கருத்தாளமிக்க பழைய பாடல்களைக் கொண்ட

* பாட்டுக்குப் பாட்டு
(தனியாள் நிகழ்வு) பெண்கள் - (தனி) - ஆண்கள் -(தனி) - ஆண், பெண் (ஜோடி)
* பரதநாட்டிய பாடலுக்கான - நாட்டியம் - (ஆண், பெண்), சிறுவர்
* காட்சியும் கானமும் (பாட்டுக்கு ஏற்ற நடிப்பு) தனி - ஜோடி
* தனிநபர் நடிப்பு - சிறுவர்களுக்கான காட்சியும் கானமும்.

14.02.2006 செவ்வாய்க்கிழமை நீங்கள் பங்குகொள்ள விரும்பும் பாடல் ''கஸெட்'' உடன் நேரில் வரவும். போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு தனித்தனி பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். 19.02.2006 ஞாயிற்றுக்கிழமை மண்டபத்தில் நடைபெறும். பெருவிழாவில் கலந்துகொள்ளலாம்.

பார்வையாளர்கள் அனுமதி இலவசம்.

**வீடியோ கலாமினி,**

T.P.: 0602212431 அச்சுவேலி. T.P.: 077 3053080.

(சி/47661)(32-17-19)

---

# பட்மின்ரன் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.3

மக்கள் வங்கியின் வடவலயத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் உள்ளரங்க விளையாட்டுக் கழகத்தினரால் டாக்டர் டி.ரி.நெல்ஸ் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் பட்மின்ரன் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் 12 வயது ஆண், பெண்களுக்கான போட்டிகள் காலை 9 மணிக்கும் 15 வயது ஆண், பெண்களுக்கான போட்டிகள் பிற்பகல் 2மணிக்கும் நடைபெறவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-190)

---

யா/வைத்தீஸ்வராக் கல்லூரியின்
இளைப்பாறிய உப அதிபர்

திரு. முத்தையா தனபாலசிங்கம் அவர்களின்

# சேவை நலன் பாராட்டு



முப்பத்து மூன்று வருட சீரிய ஆசிரியப் பணி செய்து ஓய்வுபெற்றுள்ள எமது உப அதிபர் அவர்கள் நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் சீர்பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

**- ஆசிரியர் கழகம்.**

(46286)(32-17-19)

---

# பாராட்டி வாழ்த்துகிறோம்



01.02.2006 அன்று சமாதான நீதிவானாகப் பட்டம்பெற்ற

**திரு. கந்தையா நவரெத்தினம்**

ஆயுள்வேத வைத்தியர்
(நடனமுருகன்)
அவர்கள்

நேர்வழி நின்று மிக்க நேயமுடன் மக்களுக்கு சீரிய டாக்டர் சேவை செய் நவரெட்ணம் சமாதான நீதிவானாய்ச் சாற்று புகழ் தன்னொடு பல்லாண்டு வாழ்க உயர்ந்து.

பாராட்டி வாழ்த்துவோர்:
சி.நல்லதம்பி குடும்பம், க.தில்லைநாதன் குடும்பம்,
இ.செல்வரெத்தினம் குடும்பம்,
க.சாந்தலிங்கம் குடும்பம்,
சு.தேசிங்கராசா குடும்பம்,
க.கணேசதாசன் குடும்பம்..

(46262)(18.32.19.17)

---

# காக்கைதீவுக் கிராமத்தில் 25 வீடுகள் நிர்மாணம்

நவாலி,பெப்.3

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் உதவியுடன் காக்கைதீவுக் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்புப் பணிகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காக்கைதீவுப் பகுதியைச் சேர்ந்த வீடற்ற 25 பேருக்கு வழங்குவதற்காகவே இந்த வீடமைப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக ஆனைக்கோட்டை கிராம உத்தியோகத்தர் ச.சந்திரராசா தெரிவித்தார்.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் உதவியுடன் இந்தப் பகுதியில் பொதுமண்டபம் ஒன்றையும் நூல் நிலையம் ஒன்றையும் நிர்மாணிப்பதற்கான ஏற்பாடுகளும் இடம்பெற்று வருவதாகவும் கூறப்பட்டது. (எ-100)

---

புதிய பிரிவுகள் ஆரம்பம்

# CIMA

**Foundation & Managerial Level**
ஆரம்பம் - 04-02-2006 11.30 a.m.

# aat (Srilanka)

**Medium - Tamil & English**
ஆரம்பம் - 04-02-2006 Foundation 8.30 a.m.
Intermediate & Final 10.30 a.m.

Further Details
**Director**
**Jaffna College Undergraduate Dept**
**464, Hospital Road,**
**Jaffna.**

(சி/47641)(32.17.19)

---

# பாசத்தின் முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 20 - 06 - 1940



மறைவு 14 - 02 - 2005

**திருமதி பாலசிங்கம் சிவபாக்கியம்**

அம்மா! நீ மறைந்தாலும் எங்கள்
வாழ்வில் நீங்கள் ஏற்றிய ஒளி
என்றும் அணையாது சுடர்விட்டுக் கொண்டே இருக்கும்.

க.பாலசிங்கம்,
ஆலடி றோட்,
கோண்டாவில் கிழக்கு.
(46275)(32-19-17)

தகவல்:
**கணவர்,**
**மகன்மார், மகள்மார்,**
**பேரப்பிள்ளைகள்.**

---

# நன்னடத்தைப் பாடசாலைக்கு உதவி

யாழ்ப்பாணம்,பெப்.3

கோண்டாவிலில் அமைந்துள்ள நன்னடத்தைப் பாடசாலைக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினரால் பாடசாலைப் பைகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன. (த-190)

---


**தேவை**

போட்டோ சொப், கோரெல்றோ வில் டிசைன் செய்யக்கூடிய ஆண், பெண் இருபாலாரும் தேவை. சம்பளம் 5000/=

தொடர்புகளுக்கு:
212, கோயில் வீதி, நல்லூர்.
021 222 ....

---

# அந்தியேட்டி அழைப்பு



அன்புடையீர்,

கடந்த 26.12.2005இல் அமரத்துவம் அடைந்த எமது குடும்பவிளக்கு

திருமதி
**முருகேசம்பிள்ளை இரத்தினம்மா**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (04.02.2006) சனிக்கிழமை காலை 6 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதைத் தொடர்ந்து இடம்பெறும் சபிண்டீகரண கிரியையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சத்திய பவன்,
சந்நிதி றோட்,
உடுப்பிட்டி.
(46210)(32-17-19)

மு.சத்தியதேவன் (மகன்),
மு.சத்தியேந்திரா (மகன்),
திருமதி இ.சத்தியவதி (மகள்),
க.இராமச்சந்திரா CDO (மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MAK Cost Cutter Super Market

இதோ!, யாழ் மக்களுக்காக வெகுவிரைவில்!...




எதிர்வரும் வெள்ளிக்கிழமை (10/02/06) காலை 7.30–8.40 வரையிலான சுபமுகூர்த்த வேளையில் திறப்பு விழா செய்ய இருப்பதால் அத்தருணம் உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இன்றைய நவீன கால கட்டத்தில் மக்கள் நவநாகரீகத்திற்கு ஏற்ப தங்கள் தெரிவினை மாற்றி வருகின்றார்கள், பொருட்களின் விலை, தரம், நம்பகத்தன்மை, வாடிக்கையாளருடன் சுமுகமாக உரையாடும் ஊழியர்கள் சிறந்த தெரிவினை மேற்கொள்வதற்கான சூழல் யாவற்றையும் கொண்டது

**மைக் கோஸ்ட் கட்டர் சுப்பர் மாக்கெற்**

(யாழ் வைத்திய சாலை முன்பாக)

இல: 484, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 222 9777.





21 ஆவது அகவையில் கால் பதிக்கும்......

# கலாலயா

பயிற்சியகம்

**மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.**

(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

**மகளிருக்கான துரித 1மாத/3 மாதப் பயிற்சிகள்**

- கேக் ஐஸிங்-(24 வகையான கேக் அமைப்புகளில் சகலவிதமான ஐஸிங் முறைகள்)
- உணவு தயாரித்தல் (மேலைத்தேய, கீழைத்தேய உணவுகள், சிற்றுண்டிகள்)
- கூந்தல் அலங்காரம் (20 இற்கும் மேற்பட்ட கொண்டைகள் போடுதல்)
- அடிப்படை Facial கலையும் மணப்பெண் அலங்காரமும்
- அடிப்படைத் தையல் தெரிந்தவர்களுக்கான சாறி பிளவ்ஸ் Saree - Blouse வெட்டித்தைக்கும் முறை
- 3 மாத Fabric Painting பூவேலை, கைவேலைப் பயிற்சிகள்
- 6 மாத உடை தயாரித்தல் (தையற்கலை) பயிற்சிகள்
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- இப் பயிற்சிக்கு வயதெல்லை கிடையாது.

புதிய கிழமை நாள் வகுப்புகள் ஆரம்பம் : 10.02.2006
புதிய சனி - ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம் : 11.02.2006

மேலும் விவரங்களுக்கு காலை 9 மணிமுதல் பி.ப. 2.30 மணி வரை நேரில் வரவும்.

(சி/47676) (33-34-49) இயக்குநர்.


# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் சண்முகநாதன்



*(முன்னாள் சாரதி, இ.போ.ச.)*

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சண்முகநாதன் நேற்று (02.02.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் நாகலிங்கம் - அன்ன முத்து தம்பதியரின் அன்பு மகனும் கந்தையா - அருளம்மா தம்பதியரின் மருமகனும் தங்கரத்தினத்தின் அன்புச் சகோதரரும் சத்தியதேவியின் அன்புக் கணவரும் வாமதேவன் (ஜேர்மனி), நந்தகுமார் (யாழ். போதனா வைத்தியசாலை), ரேணுகா (ஜேர்மனி), சுபாசினி (ஜேர்மனி), சுதர்சினி (ஜேர்மனி), தயானந்தி (ஜேர்மனி), அமுதரஞ்சினி (**H.N.D.A,** 1ஆம் வருட மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கவிந்தினி (ஜேர்மனி), பத்மராணி, சுதாகரன் (ஜேர்மனி), சிவபாதசுந்தரம் (ஜேர்மனி), மகிழ்ராஜா (ஜேர்மனி), சூரியமூர்த்தி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும் விஜினன், தசகன், சுஜின், ரம்மியா, சாருஜன், சாரா, சாகனா, சுஜானி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கந்தசாமி கோயிலடி,**
**நீர்வேலி தெற்கு,**
**நீர்வேலி.**
(சி/46324) (33-34-49)

**தகவல்:**
**நந்தகுமார்**
**(பாவா - மகன்).**

## முத்துக்குமாரு பரிபூரணம்



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு பரிபூரணம் நேற்று (02.02.2006) வியாழக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாருவின் அன்பு மனைவியும் பரமேஸ்வரி, இராசம்மா, தங்கமணி, செல்லக்கண்டு, செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற ஐயம்பிள்ளையின் அன்பு மைத்துனியும் இலட்சுமணன் (அமரர்), கந்தசாமி (அமரர்), சரஸ்வதி (அமரர்), அன்னலட்சுமி, நகுலாம்பிகை, பரஞ்சோதி, கனகசுந்தரம் ஆகியோரின் பாசமிகு தாயும் புனிதவதி, செல்வரத்தினம், பஞ்சலிங்கம், லோகநாதன், குமுதினி ஆகியோரின் அன்பு மாமியும் லக்ஷ்மன் (சுமன்), ஹம்சாயன், கஜானா, யதுர்சன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (03.02.2006) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்களுக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

•இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மில் ஒழுங்கை,**
**மல்லாகம்.**
(46320) (33-34-49)

**தகவல்:**
**மு.கனகசுந்தரம் (ராசா - மகன்),**
**க.லக்ஸ்மன் (பேரன்).**

## சிவசாமி தங்கவேல்

தொண்டைமானாறு பெரிய கடற்கரையைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது திருச்சியில் வசித்தவருமான சிவசாமி தங்கவேல் 01.02.2006 புதன்கிழமை திருச்சியில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருச்சியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி,*
*தொண்டைமானாறு.*
(46307)(42-33-34-49)

**தகவல்:**
**சிவசாமி (தகப்பனார்).**

# பேச்சுவார்த்தையில் தனியிடம் கோரும் சிங்கள அமைப்பு

கொழும்பு,பெப்.3

பேச்சுவார்த்தையின்போது முஸ்லிம்களுக்கு தனியான பிரதிநிதித்துவம் வழங்கப்படுமானால் வடக்கு-கிழக்கு சிங்கள மக்களின் சார்பிலும் சமாதானப் பேச்சுவார்த்தையில் பிரதிநிதித்துவம் அவசியம் என்று வடக்கு-கிழக்கு சிங்கள அமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வடக்கு-கிழக்கு சிங்கள அமைப்பின் ஏற்பாட்டாளர் சுனில் அல்கமகே இத்தகவலைத் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தையின் மூலம் விடுதலைப் புலிகளை கிழக்கில் பலப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள் எப்பட்டால் அதற்கு எதிராக தாம் செயற்படவுள்ளனர் என்று அவர் எச்சரித்தார்.

தென்னிலங்கையில் ஸ்திரமற்ற அரசு ஒன்றை அமைப்பதனை நோக்காகக் கொண்டே விடுதலைப் புலிகள் ஒற்றையாட்சிக் கொள்கையுடைய கட்சிக்கு ஆதரவான செயற்பாட்டினை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மேற்கொண்டனர்.

இதன் அடிப்படையிலேயே இன்றைய அரசு பதவிக்கு வந்தது-என்று கூறினார்.

(ஓ-13)

# சுகவாழ்வு நிறுவனத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.3

சுகவாழ்வு நிறுவனத்தின் இந்த வருடத்திற்கான வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் 3ஆம் குறுக்குத்தெருவில் உள்ள அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(த)

# தென்மராட்சி அதிபர்களுக்கு

தென்மராட்சி,பெப்.3

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் ஆறாம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஓ-117)


## பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணம்

A/L 2007

| சனி | ஞாயிறு |
|---|---|
| அளவையியல் R.P. சர்மா | புவியியல் குமரன் |
| குறியீட்டு அளவையியல் | வரைபடங்கள் |
| 1.00 p.m. | 10.00 a.m. |

**ஆரம்பம் - 04.02.2006**

Note: இதே அலகுகள் இணுவில் பொருளியற் கல்லூரியிலும் சித்தன்கேணி BARATHY இலும் ஆரம்பமாகின்றன. (46328)



**மனோகரா** யாழ்ப்பாணம்



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

இளைய தளபதி விஜய், த்ரிஷா மற்றும் பலர் நடிப்பில்

(வருகிறான் வரிப்புலி நாதியாய்)

(Dts நவீன ஒலிப்பதிவுடன்)

**ஆதி**

தினசரி பு.நே. 10.30, 1.30, 4.30, 7.30

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்

பொங்கல் வெளியீடு

அல்டிமேட் அஜித், லைலா மற்றும் பலர் நடித்த

**பரமசிவன்**



காட்சி நேரம்: 10.30, 2.30

**ராஜா** யாழ்ப்பாணம்



சிம்பு, ஜோதிகா,பிரகாஷ்ராஜ் நடித்த

**சரவணா**

இயக்கம்: K.S.ரவிக்குமார்

ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.

காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.15 மட்டும்

**நாகம்ஸ்** சுன்னாகம்



சூர்யா, திரிஷா, வடிவேல் நடித்த

**ஆறு**

காட்சிநேரம் 11.00, 3.00



# பொருளியற் கல்லூரி

யாழ்ப்பாணம் - இணுவில் (இரு இடங்களிலும்)

A/L 2008

மீண்டும் ஒரு புதிய பிரிவு
ஆரம்பம் - 04.02.2006 - சனி

| 2008 | யாழ். நகரில் | இணுவிலில் |
|---|---|---|
| Eco. | வரதராஜன் | மகேந்திரன் |
| Acc. | முகுந்தன் | முகுந்தன் |
| B.St. | முரளி | முரளி |
| Tam. | மீரா | பாலா |
| H.C. | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| Log. | R.P.சர்மா | R.P.சர்மா |
| Geo. | குமரன் | குமரன் |
| H.m. | தரன் | தரன் |
| Chr. | வசந்தன் | வசந்தன் |
| Dra. | சுகந்தன் | சுதன் |
| po.sc. | றஜீவன் | சுகாஷ் |
| His. | பத்மன் | பத்மன் |
| Eng. | நிஷாந்தன் | நிஷாந்தன் |

(46327) (33-34-49)

அனுமதியினைப் பெற்றுக்கொள்ளவும்


# கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் ஞானவைரவ சுவாமி தர்மகர்த்தா சபைப் பொருளாளரும் சமூகத் தொண்டனுமாகிய

**பொ. அரியரட்ணம் (அருமை)**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி/47679) (33-34-49)

*தர்மகர்த்தா சபையினர்,*
*உரும்பிராய்.*

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## அமரர் வேலுப்பிள்ளை செல்லையா

*(மெம்பர், மிருசுவில் வடக்கு)*

**மலர்வு:** 31.03.1934  **உதிர்வு:** 04.01.2006

கடந்த *04.01.2006* அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர் அமரர் வேலுப்பிள்ளை செல்லையாவின் மறைவின்போது ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்தும், ஆறுதல் கூறியும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று *(03.02.2006)* வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*செட்டித் தெருச்சந்தி,*
*316, நாவலர் வீதி, நல்லூர்.*
(46317) (33-34-49)

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# மரண அறிவித்தல்

## திருமதி கந்தையா புவனேஸ்வரி

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் 524, யோகபுரம், மல்லாவியை வசிப்பிடமாகவும் தற்போது வைமன் வீதி, நல்லூரில் வசித்தவருமான திருமதி கந்தையா புவனேஸ்வரி அவர்கள் நேற்று (02.02.2006) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தையாவின் (லொறிக்கந்தையா) அன்பு மனைவியும் காலஞ்சென்ற அருமைநாயகம், குலசிங்கம் (ஓய்வுபெற்ற சாரதி, இ.போ.ச.), புஸ்பராணி, கமலராணி (தாதி உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), காலஞ்சென்ற சற்குணசிங்கம் ஆகியோரின் பாசமிகு தாயும் வரதராஜா (கனடா), குணலட்சுமி (சுவிஸ்), பூராசா (மல்லாவி) ஆகியோரின் பாசமிகு சிறிய தாயும் மகேஸ்வரி, புவனேஸ்வரி (ஆசிரியை, ஸ்தான சி.சி.த.க. பாடசாலை, யாழ்ப்பாணம்), தில்லையம்பலம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனம்), சிவானந்தராசா (ராசன்), கமலாம்பிகை, சேதுப்பிள்ளை, கதிரவேலு, காலஞ்சென்ற சின்னமலர் ஆகியோரின் பாசமிகு மாமியும் மயில்வாகனத்தின் அன்புச் சகோதரியும் மகேஸ்வரியின் அன்பு மைத்துனியும் சுதா, நிகேஷ், லக்ஷ்மணன், கிருஷாந்தன், கிருஷாந்தி, லக்ஷினி, யோகநந்தி, சுசிலா, புஸ்பலதா, நளாயினி, கிருஷ்ணவேணி, கலைவாணி, மதியழகன், கோபிகிருஷ்ணா, சபேசன், ஆதிரையன், கோணேஸ்வரன், கேதீஸ்வரன், நகுலேஸ்வரன், அருமைதாஸ், திவ்வியநாதன், லோகநாதன், கிரிஜா, பத்மநாதன், தமயந்தி, காலஞ்சென்ற அரவிந்தன், நவரஞ்சன், தயாநிதி, பரமேஸ்வரன், கலாநிதி, விக்னேஸ்வரன், சுமதி, கணேஸ், சுரேஸ், றமேஸ், தினேஸ், கோமதி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.02.2006) வியாழக் கிழமை 53/4, வைமன் வீதி, நல்லூரில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முகவரி:**
**53/4, வைமன் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**
(46326) (33-34-49)

**தகவல்:**
**க.குலசிங்கம் (மகன்),**
**க.தில்லையம்பலம் (மருமகன்),**
**கா.சிவானந்தராசா (மருமகன்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் கைதான 2 இளைஞர்கள் விசாரணைக்குக் கொழும்புக்கு

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை விசேட தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு இளைஞர்கள் மேலதிக விசாரணைக்கென கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தென்மராட்சியின் நுணாவில் பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்ட முருகதாஸ் தீபரூபன் (வயது-19) மற்றும் மல்லாகப் பகுதியில் கைது செய்யப்பட்ட இரத்தினம் ஆனந்தராஜ் (வயது - 33) ஆகிய இருவரும் கொழும்புக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர்.

கொழும்பிலுள்ள பயங்கரவாத புலனாய்வு விசாரணைப் பிரிவில் இளைஞர்கள் இருவரும் கையளிக்கப்பட்டிருக்கின்றனர்.

(க)

# ஈழத் தமிழர்களின் போராட்டத்துக்கு தமிழகத் தலைவர்களே கலங்கரைவிளக்கம்

## நூல் வெளியீட்டு விழாவில் வைகோ உரை

சென்னை, பெப். 03

ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டத்துக்கு கலங்கரை விளக்கமாக நாங்கள் இருப்போம் என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் வை.கோ. தெரிவித்துள்ளார்.

கவிஞர் முத்துலிங்கம் எழுதிய 'காற்றில் விதைத்த கருத்து' எனும் நூலின் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு வை.கோ மேலும் கூறியதாவது:-

தமிழீழம் மலரவேண்டும். அதுவரும் என்று புத்தகத்தில் கவிஞர்முத்துலிங்கம் குறிப்பிட்டுள்ளார். தமிழீழ உணர்வு எங்கும் பரவவேண்டும். உரிமைக்காகப் போராடும் ஈழத் தமிழர் பிரச்சினையில் இலங்கைக்கு இந்திய அரசு உதவக்கூடாது. தமிழர்களுக்கு நாதியில்லை என யாரும் நினைக்கக்கூடாது. அவர்களுக்கு கலங்கரை விளக்கமாக நாங்கள் இருப்போம். - என்றும் அவர் தெரிவித்தார். (க)

# எஸ்.பி. திஸநாயக்கவை விடுவிக்க தொடர் சத்தியாக்கிரகப் போராட்டம்

நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்திற்காக சிறைவாசம் அனுபவித்துவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திஸநாயக்கவை விடுதலை செய்யக்கோரி ஐக்கிய தேசியக் கட்சி நாடளாவிய ரீதியில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தத்திட்டமிட்டுள்ளது. அதன் முதல்கட்டமாக நேற்று கொழும்பில் விகாரமஹாதேவி பூங்காவுக்கு முன்பாக இந்தப் போராட்டம் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மேலக மக்கள் முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய சிறுபான்மைக் கட்சிகளின் பிரதிநிதிகளும் இன்னும் பல கட்சிகளின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர். அவர்களுடன் ஆயிரக்கணக்கான மக்களும் மதத்தலைவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்ட இப் போராட்டம் எஸ்.பி. திஸநாயக்க விடுதலை செய்யப்படும் வரை முன்னெடுத்துச் செல்லப்படும் என ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

(க).

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைக்குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.(க-164)

## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைதிப்பேச்சுகளை மீள ஆரம்பிப்பதில் அரசு எவ்வளவு கரிசனையாக உள்ளதோ அதேயளவு சிரத்தையுடன் புலிகளும் இருக்கிறார்கள் என நாம் கருதுகின்றோம்.

ஆகவே, இத்தகைய சம்பவங்களுக்காகப் பேச்சுகள் தடைப்படும் என நான் கருதவில்லை. - என்றார் அமைச்சரவைப் பேச்சாளரான மங்கள சமரவீர. (க)

## சந்திப்பு ரத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற உறுப்பினர்களுக்கும் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் நடைபெறவிருந்த சந்திப்பு நாளை வரை ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது. (க)

## கடத்தப்பட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸார் அந்த இருவரின் வாக்குமூலங்களையும் பதிவு செய்தனர்.

வாக்குமூலம் பதிவு செய்து முடிந்த பின்னரும் அந்த இரு பெண் பணியாளர்களும் வீடு திரும்ப பொலீஸார் அனுமதிக்கவில்லை.

மேலும் சில புலனாய்வாளர்கள் அந்தப் பெண்களை விசாரிக்க வேண்டி இருப்பதால் அவர்கள் இருவரும் பொலீஸ் நிலையத்திலேயே இருக்கவேண்டும் என்றும் -

அவர்களைக் கூட்டிவந்த தமிழர் புனர்வாழ்வுக் கழக அதிகாரியும் சட்டத்தரணியும் வீடு திரும்பலாம் என்றும் -

பொலீஸார் நேற்று முன்னிரவில் கூறினர் எனக் கூறப்படுகின்றது.

இதனால் புனர்வாழ்வுக் கழக அதிகாரிகள் மட்டத்தில் குழப் பமும், விசனமும் நிலவியது.

(க)

# நாடாளுமன்ற அமர்வு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரும் மேற்கொண்டுவரும் - தமிழ் மக்களுக்கு எதிரான - அடாவடித்தனங்களைக் கண்டித்தும் ஒட்டுப் படையினரால் கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக சமூக சேவையாளர்களை உடன் விடுதலை செய்யக் கோரியுமே தமிழ் எம்.பிக்கள் சபைக்குள் ஆர்ப்பாட்டம், ரகளை மேற்கொண்டு சபை அமர்வுகளைக் குழப்பத் திட்டமிட்டிருந்தனர்.

நாடாளுமன்றில் தமிழ் எம்.பிக்கள் இவ்வாறு தொடர்ந்து ஆர்ப்பாட்டம் செய்வதன் மூலம் தமிழர்கள் இப்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சர்வதேசத்திற்குப் பெரிதாக எடுத்துக்காட்டப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்தக் காரணத்தாலேயே அரசு நாடாளுமன்றில் வெடிகுண்டு இருப்பதாகக் கதைகட்டிவிட்டு, நாடாளுமன்றத்தை ஒத்திப்போட்டு தமது போராட்டத்தை முடக்கியுள்ளது எனத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

நேற்று வழமைபோல் காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றம் கூடவிருந்தது. நாடாளுமன்றம் கூடுவதற்கு முன் காலை வேளையில் சபையையும் அதனைச் சூழ்ந்த பார்வையாளர்கள் கலரியையும் விசேட அதிரடிப்படையினர் மோப்ப நாய்கள் மற்றும் சோதனைக் கருவிகள் சகிதம் துருவித் துருவிச் சோதனையிடுவது வழமை. அவ்வாறான சோதனை நடவடிக்கை நேற்றும் இடம்பெற்றது.

இச்சோதனை நடவடிக்கையின்போது மோப்பநாய் ஒன்று ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களின் பின்வரிசை ஆசனங்களுக்குள் புகுந்து அவ்விடத்தில் சந்தேகத்திற்கிடமான பொருள் இருப்பதாக முகர்ந்து காட்டியதாக விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

இது வழமைக்கு மாறான ஒன்றாகவிருந்ததால் அந்த இடத்தில் - அதாவது குறிப்பிட்ட அந்த ஆசனங்களில் அல்லது மேசைகளில் - குண்டு அல்லது வெடிபொருள் ஏதும் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனத் தாங்கள் சந்தேகிக்கின்றனர் என விசேட அதிரடிப்படையினரும் பொலீஸாரும் தெரிவித்தனர்.

காலை 9.30 மணியளவில் நாடாளுமன்றம் கூடவேண்டிய நிலையில் ஒன்பது மணிக்கு முன்பிருந்தே இச்சோதனை நடவடிக்கை ஆரம்பமாகியிருந்தன. 9.55 மணிவரையும் இச்சோதனை நடவடிக்கை தொடர்ந்தது.

எதுவும் கண்டுபிடிக்கப்படாத நிலையில், சபையில் பாதுகாப்பு அச்சுறுத்தல் நிலவுவதாகவும், சபை நடவடிக்கைகளை ஒத்திப்போடுமாறும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கோஷம் எழுப்பினர்.

9.55 மணியளவில் பொலீஸாரும் விசேட அதிரடிப் படையினரும் சபையை விட்டுத் தற்காலிகமாக வெளியேற சபாநாயகர் சபைக்குள் வந்தார்.

மறுபடியும் தமிழ் எம்.பிக்கள் சபைக்குள் ஆர்ப்பாட்டம் நடத்தத் தயாராகவிருந்ததால், சபாநாயகர் வழமைக்கு மாறாக இம்முறையும் பின்வழியாலேயே சபைக்கு வந்தார்.

சபாநாயகர் வந்து ஆசனத்தில் அமர்ந்ததும் தமிழ் எம்.பிக்கள் சபாபீடத்துக்கு முன்னே வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடத் தொடங்கினர். ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ ஆர்ப்பாட்டம் செய்ய வந்த எம்.பிக்களைப் பார்த்து சந்தோசமாக ஆர்ப்பாட்டம் செய்யுங்கள் எனக் கூறி வழியனுப்பி வைத்தார்.

தமிழ் எம்.பிக்கள் சபாபீடத்துக்குமுன் வந்து ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கிய போது, "இங்கே வராதீர்கள். சபையில் பாதுகாப்பு அச்சுறுத்தல் நிலவுவதால் சபையை ஒத்திப்போடப் போகிறேன். உங்கள் ஆர்ப்பாட்டத்தை நிறுத்துங்கள்" எனக்கூறிய சபாநாயகர், நாடாளுமன்றத்தை இம்மாதம் 14ஆம் திகதிவரை தாம் ஒத்திவைக்கிறார் எனத் தெரிவித்துவிட்டு சபாநாயகர் ஆசனத்தை விட்டு எழுந்து சென்றுவிட்டார்.

தமிழ் எம்.பிக்கள் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டம் செய்தனர். அப்போது ஆளுங்கட்சி வரிசையில் அமர்ந்திருந்த டக்ளஸ் தேவானந்தா, மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் தினேஷ் குணவர்தன ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழ் எம்.பிக்களுடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டனர். தமிழ் எம்.பிக்களுக்கு எதிராகக் கோஷங்களையும் எழுப்பினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தனை, மஹிந்தானந்த அளுத்கமகே பிடித்து இழுத்து டக்ளஸிடம் கொடுத்தார். ஏனைய தமிழ் எம்.பிக்கள் ஈழவேந்தனைப் பாதுகாத்துப் பிடித்து இழுத்தெடுத்துக்கொண்டு போனார்கள்.

பிறகு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிவாஜிலிங்கத்திற்கும் அமைச்சர் டக்ளஸிற்குமிடையில் கடும் சொற்போர் நிகழ்ந்தது. அதனைத் தொடர்ந்து டக்ளஸ் சிவாஜிலிங்கத்தை நெருங்கி வந்து அவரது காதில் ஏதோ கூறிவிட்டு, சிவாஜிலிங்கத்தை முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு சபையைவிட்டு வெளியேறினார்.

அத்தோடு அந்த ஆர்ப்பாட்டம் நிறைவுபெற்றுவிட்டது. இவை எல்லாம் நடந்தது சுமார் இரண்டு நிமிடங்கள் மாத்திரமே.

அதனையடுத்து மீண்டும் பொலீஸாரும் விசேட அதிரடிப்படையினரும் வந்து அதேயிடத்தில் சோதனை நடத்தினர். பலமணி நேரமாகச் சோதனை நடத்தியும் சந்தேகத்திற்கிடமான முறையில் எதுவும் கிடைக்கவில்லை என்றே தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இது அரசின் பொய் நாடகம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

சபை நடவடிக்கைகளைத் தாங்கள் முடக்குவதன் மூலம் தமிழர்களின் பிரச்சினை சர்வதேசத்திற்குப் பெரிதாக எடுத்துக்காட்டப்படும் என்று அஞ்சியே அரசு இவ்வாறு நாடகமாடுகிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற ஆசனப் பகுதியில் வெடிகுண்டை ஒத்த ஏதேனும் பொருளை 'ஸ்பிறே' செய்ததன் மூலம் (தூவியதன் மூலம்) மோப்பநாய்களைக் குழப்பி, இத்தகைய வெடிகுண்டுப் புரளியைக் கிளப்பி, தங்களின் போராட்டத்தை மழுங்கடிக்க அரசுத் தரப்பினர் திட்டமிட்டுச் செயற்பட்டிருக்கின்றனர் என்று சந்தேகம் வெளியிட்டார் தமிழ்க் கூட்டமைப்பின் எம்.பி. ஒருவர்.

(க)


விக்னா
கல்வி நிறுவனம்
பொருளியல் வகுப்புகள் அனைத்தும் சனி, ஞாயிறு வழமையான நேரப்படி நடைபெறும்

புதிய
யூனிவேசல் அக்கடமி
(பா/ இந்து மகளிர் கல்லூரி அருகே)
அரசியல்
திரு.பொன்சந்துரு
A/L 2006
PAPER CLASS
A/L 2007
ஆரம்பத்தில் இருந்து

ஆவண உதவியாளர் போட்டிப்
பரீட்சை வகுப்புகள் நடைபெறுகின்றன
வழமையான ஆசிரியர்கள்
D.M.I யாழ். சனி, ஞாயிறு 11.30-2.00
கிறிஸ்ரல் நெல்லியடி சனி, ஞாயிறு 8.30-10.30
ஆரம்பத்தில் கற்பிக்கப்பட்ட விடயங்களும் கற்பிக்கப்படும்

S.L.E.A.S திறந்த
B.Ed. அனுமதித்தேர்வு } பரீட்சைகளுக்கான
வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
வழமையான ஆசிரியர்கள்
சனி, ஞாயிறு 2.30 - 5.00
D.M.I யாழ். நகரில் நடைபெறும்.

COLLEGE OF ENGLISH
பிறவுண் வீதி, யாழ்.
Spoken English With Grammar
Mr. T.Thanendran
ஆரம்பம்: 04.02.2006
சனி, ஞாயிறு
Batch I 3.30
Batch II 4.30

நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தரம் 1 முதல் O/L வரை
பிரிவு 2 - ஆரம்பம் - 04.02.2006
சனி பி.பகல் 3.30 மணி (பு.நே)
- தகுதி - அனுபவம் - திறமை வாய்ந்த ஆசிரியர்களின் சேவை.
- வருடத்தில் 6 பரீட்சைகள் (நாவலர் வெளியீடு) 1ஆவது பரீட்சை 15.02.2006 (நடுத்தவணை)
- வரையறுக்கப்பட்ட அனுமதிகளே வழங்கப்படும்.
குறிப்பு- நடுத்தவணைப் பரீட்சை வினாத்தாள் தேவையான கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்புகள் 07.02.2006இற்கு முன் தொடர்பு கொள்ளவும்.
Phone No. 8068, 0777243527

கணக்கீடு
திரு.பாலவாசன்
A/L 2007
பெ.தேய்வுக்கான கணக்கீடு
சனி, ஞாயிறு
09-10
04-02-2006
9.00 a.m.
விக்னா
கல்வி நிறுவனம்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
aat Foundation and Intermediate
Chartered Accountancy
Foundation
விரிவுரைகள் அனைத்தும் 11.02.2006 இல் ஆரம்பமாகின்றன. அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்.
Office Hours:-
Mon., Wed., Fri. 9.00 a.m. - 1.00 p.m.
Sat. and Sun 8.30a.m. - 11.30
IPAS 199, Main Street, (Primier Bakery Building) Jaffna. Tel.: 0777 563294, 0777 270452

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ... 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.02.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org